1675

y the Text-Book Committee, Madras & Ceylon.



செந்தமிழ் வாசகம்.

மூன்றாம் புத்தகம்

OF THE REGISTRAR OF
20 JUN 1930
MADRAS

மணி. திருநாவுக்கரசு முதலியார்

எழுதியது

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

திருவல்லிக்கேணி,

சென்னை.

TB
031c6
N30
176663

1675

செந்தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

14 06
4 94 81186
THE REGISTRAR OF BOOKS
30 JUN 1930
MADRAS

சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்

எழுதியது

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை] [அணா 4½

176663

Approved by the Text-Book Committee,

Vide Fort St. George Gazette, Page 517,

Dated 13th November, 1928.

முகவுரை

1. செந்தமிழ் வாசகம் எனப் பெயரிய இப்பாட புத்தகங்கள் நமது மொழி இயல்பு, பழக்க ஒழுக்கங்கள், நூன் முறைகள் முதலியவற்றையும், தமிழ் அரசர், புலவர், வீரர், மக்கள் முதலியோர் செயல்களையும் சிறுவருக்குச் சிறிது சிறிதாக இளமைதொட்டே புகட்டித் தமிழறிவையும், ஆர்வத்தையும் விளைவிக்க வேண்டும் என்பதையே தலைமை நோக்கமாக வைத்து அமைக்கப்பட்டுள்ளன.

2. கால முறைமைக்குத் தக்கவாறு சரித்திரம், நீதி, பூதபௌதிக சாஸ்திர உண்மைகள், அரசியல், பொது இயக்கங்கள், கதைகள் முதலியவைகளும், சிறுவர் பொது அறிவைப் பெருக்குதற்கு இசைந்தபடி, தக்க முறையில் எழுதப்பட்ட பாடங்களும் இப்புத்தகங்களிற் காணப்படும்.

3. இவற்றின் மொழிநடையும், சொல் வகையும், பொருட்கூறும், படிப்படியாக உயர்ந்து செல்லும் திறனும், புதுச்செய்யுட்களின் அமைப்பும், பழஞ்செய்யுட்களின் கோப்பும், பாகுபாடும், விளக்கமான படங்களின் வைப்பும் யாவருக்கும் மகிழ்வை ஊட்டும்.

4. இதன்கண் ஆங்காங்கு வினாக்கள் சேர்க்கப்பட்டும், உள்ளக்கிளர்ச்சி உண்டாக விநோதக் கதைகளும் வேடிக்கைக் கவிகளும் கூட்டப்பட்டும், ரகர றகர பேதஞ் சிறிது காட்டப்பட்டும் இலக்கண பாடங்கள் தரப்பட்டும் இருக்கின்றன.

5. ஒவ்வொரு புத்தகத்தின் இறுதியிலும் பாடங்களின் போக்கையும் சொற்பொருளையும் உய்த்துணரத் தக்க குறிப்புரையும் உளது. தமிழ்த் தாய்க்குச் செய்யும் இச்சிறுபணியைத் தமிழுலகம் கடைக்கணிக்குமாறு திருவருளை வேண்டி நிற்கும் அடியன் :

மணி. திருநாவுக்கரசன்.

OFFICE OF THE ... 20 JUN 1930 ... MADRAS

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	தாமரை	1
2.	தாமரைப் பாட்டு	4
3.	முழு மூடன்	5
4.	வேம்பு	6
5.	கடவுள் வாழ்த்து	10
6.	நாள்	11
7.	ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டில்லை ...	14
8.	புறு	16
	இளமைப் பெயர்கள்	20
9.	எல்லாம் இறைவன் செயல்	21
10.	மூடன் நட்பு ஆகாது	23
11.	மூட நம்பிக்கை	24
12.	இலக்கணம்	25
13.	நாயும் பூனையும் (முதற்பாகம்)	28
14.	நாயும் பூனையும் (இரண்டாம் பாகம்) ...	33
15.	நன்றியுள்ள நாய்	38
	நாய்ப் பாட்டு	40
16.	உருத்திராக்ஷப் பூனை	41
17.	பழமொழி வரிசை	43
18.	நெருப்பு	45
19.	அன்னை மொழியைப் பொன்னெனப் போற்று.	48
20.	தாய்	50

எண்	பொருள்	பக்கம்
21.	மீன்	51
22.	வானவில்	55
23.	உழவின் சிறப்பு I	57
24.	உழவின் சிறப்பு II	60
25.	உழவு—	
	I. ஆத்தி சூடி	63
	II. கொன்றை வேந்தன்	63
26.	தென்னையின் மேல் புல்லுக் கேறினவன் ...	64
27.	அரசாட்சி	65
28.	பாரத தேவி	68
29.	உடற் பழக்கம்	70
30.	திருவள்ளுவர் நெசவுத்தொழில் செய்தல் ...	73
31.	பெரு நள்ளி	75
32.	வழி நடை	79
33.	சுட்ட பழமா சுடாத பழமா	81
34.	தமிழ் மொழி	84
35.	ஆத்திசூடி கொன்றைவேந்தன் (ஒத்த பகுதிகள்).	85
36.	கொன்றை வேந்தன்	88
	குறிப்புரை	89



திருவள்ளுவர் நெய்தல்.

20 JUN 1930
MADRAS

செந்தமிழ் வாசகம்

மூன்றாம் புத்தகம்

1. தாமரை

1. பிள்ளைகளே, நீங்கள் பூவைப் பற்றி முன் புத்தகத்தில் படித்திருக்கிறீர்கள். சில பூக்கள் மரங்களிலே கொம்புகளில் பூக்கின்றன. சில மலர்கள் நிலத்திலே புதர்களில் மலர்கின்றன. சில புஷ்பங்கள் கொழு கொம்புகளிலே கொடி

களில் புஷ்பிக்கின்றன. சில மலர்கள் நீரிலே கொடிகளில் அலர்கின்றன.

2. கொம்பில் பூப்பது கோட்டுப் பூ. நிலத்தில் பூப்பது நிலப் பூ அல்லது புதற் பூ. கொடியில் மலர்வது கொடிப் பூ. நீரில் மலர்வது நீர்ப் பூ.

3. தாமரைப் பூ நீர்ப் பூ ஆகும். தாமரை தண்ணீரில் தோன்றும் ஒரு கொடி. இதைப் போலவே அல்லி, கொட்டி முதலான பலவகைக் கொடிகள் தண்ணீரில் தோன்றுகின்றன. தாமரைக் கொடி ஏரி, குளம், குட்டை, மடு முதலிய இடங்களில் படர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம். தாமரை படர்ந்திருக்கும் குளத்தைத் தாமரைக் குளம் என்பார்கள். அல்லி படர்ந்திருக்கும் கேணிதான் அல்லிக் கேணி.

4. ஒரு பெரிய குளத்தில் ஒரு சிறிய தாமரைக் கொடியை விட்டால் அது சிறிது காலத்துக் கெல்லாம் படர்ந்து குளத்தை மூடிக் கொள்ளும். கொடி படரும் பொழுது சேற்றில் அங்கங்கே வேர் ஊன்றிக் கொள்ளும். கொடிகள் தண்ணீரில் ஒன்றோடொன்று வலையைப்போல் பின்னிக்கொண் டிருக்கும். இலைகளும், பூக்களும் நீரின் அளவே நிற்கும். நீந்தத் தெரிந்தவர்களும் தாமரைக் குளங்களில் இறங்கினால் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

5. தாமரைத் தண்டு முள்ளுடையதாக இருக்கும். ரோஜா புஷ்பத்தின் காம்பிலும் முள்

இருக்கிறது. தாமரைத் தண்டில் துளைகள் உண்டு. துளைக்கு நாளம் என்று பெயர். தண்டிலிருந்து நார் உரிக்கலாம். சிலர் அந்த நாரைக் கோவில் களில் திருவிளக் கேற்ற உபயோகப் படுத்து கிறார்கள்.

6. தாமரை இலை வட்டமாக இருக்கும். வளமான சில தாமரை இலைகள் வண்டியின் உருளையைப் போல அவ்வளவு பெரிதாகவும் வள ரும். தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாது; அதன்மேல் தண்ணீர் முத்து முத்தாக விளங் கும். தாமரை இலையை உண்கல மாகவும் உப யோகிக்கலாம்.

7. தாமரைப் பூவில் பலவகை உண்டு. வெண்மை நிறமுடையது வெண்டாமரை; செம்மை நிறமுடையது செந்தாமரை; கருமை நிற முடையது கருந் தாமரை அல்லது நீலத் தாமரை. தாமரைப் பூ கிண்ணம் போல் மலரும். தாமரைப் பூவில் இதழ்கள் அதிகம். வெளியிலே இருப் பது புற விதழ்; உள்ளே இருப்பது அக விதழ். பூக்கள் எல்லாவற்றிலும் தாமரைப் பூவே சிறந் தது. தாமரைப் பூ பார்ப்பதற்கு அழகாக இருக் கும். செந்தாமரையில் இலட்சுமியும், வெண்டாம ரையில் சரஸ்வதியும் வசிப்பதாகக் கூறுவார்கள்.

8. தாமரை காலையில் மலரும்; மாலையில் குவி யும். தாமரை மலரை அழகான கண்ணுக்கும், முகத்துக்கும் ஒப்பாகச் சொல்லுவார்கள்.

2. தாமரைப் பாட்டு

1. காலை விரியும் தாமரையே
மாலை குவிவ தேனுரையே.

2. பூவிற் சிறந்து விளங்குவையே
போற்றும் அரசெனத் துலங்குவையே.

3. செங்கதிர் கண்டு மகிழ்வாயே
செந்நெருப் பெனவே திகழ்வாயே.

4. கண்ணுக் குன்னை ஒப்பென்றே
கழறுவ தும்மொரு தப்பன்றே.

5. திருமகள் வந்தாள் உனைத்தேடி
செல்வங் கொணர்ந்தாள் மிகநாடி.

6. கலைமகள் கற்றாள் நாளெல்லாம்
கண்டுனைச் சேரக் கலையெல்லாம்.

7. பொன்னாற் செய்துனைக் காண்பாரே
பூவோ டணியாய்ப் பூண்பாரே.

8. சித்திர மெழுதிச் சேர்ப்பார்கள்
சிறந்த கவியிலும் கோப்பார்கள்.

9. திருவடி எனப்பகர் தாமரையே
தெரிந்திருந் தால்நீ எனக்குரையே.

3. முழு மூடன்

1. நல்லூர் என்ற ஊரிலே நங்கை என்னும் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அழகு மிகுந்தவள்; கல்வி கற்றவள்; அறிவிற் சிறந்தவள். அவள் அழகும், அறிவும் உடைய ஒருவனை மணஞ் செய்துகொள்ள விரும்பினாள்.

2. அப்படி இருக்கையில் ஓர் அழகுள்ள ஆடவன் வந்தான். அவனைக் கண்ட நங்கை அவனுக்கு அறிவு இருக்கிறதா என்று அறிய அவனுடன் பேசிக்கொண்டிருந்தாள். அப்போது அங்கே சட சட என்று ஓர் ஓசை உண்டாயிற்று. அந்தப் புருஷன், "அது என்ன?" என்று அவளைக் கேட்டான். அவள், "அது உடும்பு," என்றாள். உடனே அவன், "ஆனால் அதிலோர் இறகு பிடுங்கிவா, காது குடையலாம்," என்றான்.

3. நங்கை, "உடும்புக்கு இறகு உண்டா? மூடா, போய்வா," என்று சொல்லி அவனைத் துரத்திவிட்டாள். சிறிது காலம் சென்ற பிறகு வேறொருவன் வந்தான். நங்கை அவனையும் அப்படியே இருக்கச் சொல்லி பேச்சுக் கொடுத்துக் கொண்டு வந்தாள். அப்போது அவள் அவனுடனே, "முன்னொரு மூடன் உடும்பில் இறகு பிடுங்கி வரச் சொன்னான்," என்று கூறி நகைத்தாள். அதற்கு அவனும் கூடச் சிரித்து, "ஓகோ! அவன் ஆமை யென்று நினைத்திருப்பான்," என்றான்.

4. நங்கை, இவன் அவனிலும் முழு மூடன் என்று எண்ணி, இகழ்ந்து, 'ஓடிப் போ' என்று அவனையும் அப்படியே துரத்திவிட்டாள்.



4. வேம்பு

1. வேப்ப மரத்தை நாம் எவ்விடத்திலும் காணலாம். குளக் கரையிலும், ஏரி கரையிலும் வேப்ப மரங்கள் மிகுதியாக இருக்கின்றன. வேப்ப மரங்கள் நிறைந்த இடத்தை வேப்பஞ் சோலை என்று வழங்கலாம். வேபப மரங்கள் சூழ்ந்

திருக்கும் குளத்திற்கு வேப்பங் குளம் என்று பெயர். வேப்ப மரம் பலவகையிலும் பயன்படும் நல்ல மரம்.

2. வேம்பு குளிர்ந்த நிழலைத் தரும். அதன் நிழலை எல்லாரும் விரும்புவர். வழி நடப்பவர் வேப்ப மரத்தைக் கண்டவுடன் அதன் அடியிலே இருப்பர். அதன் நல்ல நிழல் அவர்கள் இளைப்பைத் தீர்த்துவிடும்; மேலும் நடப்பதற்கு அவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டும்.

3. நமது நாட்டிலே நோயாளிகளை வேப்பிலையால் மந்திரிப்பார்கள். வேப்பிலையில் பட்ட காற்று உடம்பின்மேல் படுவதால் சில நோய்கள் தீரும். வேப்ப மரத்தின் அடியிலே பிள்ளையார் கோவில்கள் பல இடங்களில் இருக்கின்றன. அந்தப் பிள்ளையாரை வேம்படிப் பிள்ளையார் என ஜனங்கள் சொல்லுவார்கள். வேப்ப மரத்தடியிலே மாரி கோவிலும் நாகப் பிரதிஷ்டையும் உண்டு. இவை யெல்லாம் வேப்ப மரத்தின் பெருமையை நமக்குக் காட்டுகின்றன.

4. மரங்களுக்கு வேர் உண்டு. அது மரத்தைத் தாங்கிக்கொண் டிருக்கும். வேர் பூமியில் ஊன்றிப், பல பக்கங்களிலும் பரவி இருக்கும். சில மரங்களின் வேர்கள் வெளியிலேயும் காணப்படும். வேம்பின் அடிமரத்தைப் பார். அடிமரம் மிகவும் பருமனாக இருக்கும். அதன்மேல் மூடியிருக்கும் பட்டை கரடு முரடாக இருக்கிறது. இப்

படியிருக்கும் அடிமரத்திற்குப் போரியரை என்று பேர். அடிமரத்தை அரை என்றுஞ் சொல்லுவ துண்டு. எல்லா மரங்களிலும் அடிமரம் இப் படியே இராது. சில மரங்களில் அடிமரம் குமிழி குமிழியாக இருக்கும். அதற்குப் போகுட் டரை என்று பெயர். வேறு சில மரங்களின் அரைகள் வழு வழுப்பாக இருக்கும். அதற்குக் கோழரை என்று பெயர்.

5. அடிமரத்தினின்றும் கிளைகள் பிரிகின் றன. கிளைத்திருப்பது கிளை எனப்படும். கிளை யில் கொம்புகள் நிற்கின்றன. சிறிய கொம்பு களுக்கு வளார் என்று பெயர். இதை மலார் என்று வழங்குகிறார்கள். வேப்பிலை வளைந்து சிறியதாக இருக்கும். அதன் ஓரம் வாளைப்போல் பல்லுப் பல்லாக இருக்கும். இலை பசுமை நிற முடையது. பழுப்பிலை மஞ்சள் நிறமாக இருக் கும். வேப்பிலையை ஒட்டகம் தின்னும்.

6. வேம்பின் அரும்பு நண்டின் கண்ணைப் போல் நீண்டிருக்கும். வேப்பம் பூ வெண்மை யாகவும், மிகச் சிறியதாகவும் இருக்கும். அதற்கு நறு மணம் உண்டு. வேப்பங் காய் பச்சை நிற முள்ளது. அது சிறிது நீண்டு உருண்டையாக இருக்கும். அது மிக்க கசப் புடையது. பழம் மஞ்சள் நிறமாகவும் தின்பதற்கு இனிப்பாகவும் இருக்கும். வேப்பங் கனிமேல் காக்கைக்கு விருப் பம் அதிகம்.

7. வேப்ப மரத்தில் பலகைகள் அறுக்கலாம். பலகையினுல் கதவு செய்யலாம். வேப்பந் துண்டுகளைத் தூலங்களாகவும், கைத்துண்டுகளாகவும் உபயோகிக்கிருர்கள். மருத்துவர்கள் வேப்பங் கட்டையை மருந்துகள் செய்ய விறகாகப் பயன் படுத்துவார்கள். வேம்பின் பட்டை, இலை, ஈர்க்கு இவைகளினுல் கஷாயம் இறக்கி நோய்களுக்குக் கொடுப்பார்கள். வேப்பங் கொழுந்தைக் குழந்தைகளுக்கு அரைத்துக் கொடுப்ப துண்டு. வேப்பம் பூவை உலர்த்திக் குழம்பிலும், இரசத்திலும் சேர்ப்பார்கள். அன்றி அதைத் துவையல் அரைத்தும், பச்சடி செய்தும் உண்பார்கள்.

8. வேப்பங் கொட்டையிலிருந்து எண்ணெய் இறக்கலாம். வேப் பெண்ணெயை உடம்பிலே தடவித் தேய்ப்பதால் கை கால் பிடிப்பு, கழுத்து வலி முதலிய நோய்கள் நீங்கும். வேப் பெண்ணெயை விட்டால் புழுத்த புண்களும் ஆறிவிடும். வேப்பங் குச்சியால் விளக்கினுல் பல் துலங்கும்.

வேம்பு + மரம் = வேப்ப மரம்.
வேம்பு + வேர் = வேப்ப வேர்.
வேம்பு + இலை = வேப் பிலை.
வேம்பு + கொழுந்து = வேப்பங் கொழுந்து.
வேம்பு + பழம் = வேப்பம் பழம்.
வேம்பு + துண்டு = வேப்பந் துண்டு.
வேம்பு + செடி = வேப்பஞ் செடி.
வேம்பு + நெய் = வேப்ப நெய்.
வேம்பு + எண்ணெய் = வேப்பெண்ணெய்.
எள் + நெய் = எண்ணெய்.
வெள் + நெய் = வெண்ணெய்.

5. கடவுள் வாழ்த்து

எவன் இவ்வுலகம் எல்லாம் படைத்தானோ
எவன் எவ்வுயிரும் உடம்பில் அடைத்தானோ
எவன் எவ்வுயிர்க்கும் இன்பந் தருவானோ
எவன் எவ்வுயிரும் அழைக்க வருவானோ
அவன் திருப்புகழை அன்பாய்ப் பாடுவனே
அவன் திருஅருளில் இன்பாய் ஆடுவனே. (1)

எவன் கண்தந்து காட்சி அளித்தானோ
எவன் உள்ளிருந்தும் எனக்கே ஒளித்தானோ
எவன் எனைக்காக்க அன்பு நிறைந்தானோ
எவன் என்தந்தை தாயாய்ச் சிறந்தானோ
அவன் திருப்புகழை அன்பாய்ப் பாடுவனே
அவன் திரு அருளில் இன்பாய் ஆடுவனே. (2)

எவன் அறந்தானோர் வடிவாய் அமைந்தானோ
எவன் எப்பொருட்கும் அழகாய்ச் சமைந்தானோ
எவன் எவ்வுயிர்க்கும் இழிவை எண்ணானோ
எவன் எவ்வுயிர்க்கும் அழிவைப் பண்ணானோ
அவன் திருப்புகழை அன்பாய்ப் பாடுவனே
அவன் திரு அருளில் இன்பாய் ஆடுவனே. (3)

எவன் நான் வேண்டும் எல்லாம் கொடுப்பானோ
எவன் அன்புடையார் தமையே அடுப்பானோ
எவன் யான் உண்ணும் உணவாய் நிகழ்வானோ
எவன் எவ்வறிவுந் தானாய்த் திகழ்வானோ
அவன் திருப்புகழை அன்பாய்ப் பாடுவனே
அவன் திரு அருளில் இன்பாய் ஆடுவனே. (4)

6. நாள்

தாய் :—முத்து, சூரியன் தோன்றிவிட்டான், இன்னும் தூக்கமா! எழுந்திரு.

முத்து :—அம்மா, இன்றைக்குப் பள்ளிக்கூடம் இல்லை.

தாய் :—பள்ளிக்கூடம் இல்லாவிட்டால் என்ன! எப்பொழுதும் காலம்பெறவே எழுந்திருக்க வேண்டாமா ?

முத்து :—அம்மா, காலம்பெறவே ஏன் நாம் எழுந்திருக்க வேண்டும் ?

தாய் :—முத்து, காலையில் எழுந்தால்தான் உடம்பு சுறு சுறுப்பாக இருக்கும், அறிவு தெளிவாக இருக்கும், வேலைகளை நன்ருகச் செய்யலாம்.

முத்து :—ஆம், அம்மா, உபாத்தியாயர் கூடக் கோழி கூவும் பொழுது எழுந்திருக்க வேண்டும் என்று சொன்ஞர்.

தாய் :—அதுதான் நல்லது. கோழி சூரியன் உதிக்கு முன்பே எழுந்து கூவுகிறது. அதன் குரலைக் கேட்டவுடன் எல்லாரும் எழுந்திருக்கவேண்டும். மற்றப் பறவைகளும் காலையிலேயே எழுந்து விடுகின்றன.

முத்து :—அம்மா, காலை என்ருல் என்ன ?

தாய் :—சூரியன் ஆறு மணிக்குத் தோன்றுகிருன். ஆறு மணி முதல் பத்து மணிவரையில் காலைப்பொழுது ஆகும். பத்து மணி முதல் இரண்டு மணி வரையில் நண்பகல் ஆகும்.

இரண்டு மணி முதல் சூரியன் மறையும் வரையில் மாலைப் பொழுது ஆகும்.

முத்து :—அம்மா, இதுபோல் இரவிலும் பொழு துகள் உண்டோ ?

தாய் :—உண்டு, மாலை ஆறு மணி முதல் பத்து மணி வரையில் முன்னிரவு ஆகும். இரவு பத்து மணி முதல் இரண்டு மணி வரையில் நள்ளிரவு ஆகும். இரவு இரண்டு மணி முதல் சூரியன் மறுபடி தோன்றும் வரையில் வைகறைப் பொழுது ஆகும்.

முத்து :—அம்மா, பகற் பொழுது மூன்று, இராப் பொழுது மூன்றோ ?

தாய் :—ஆம், இந்த ஆறு பொழுதுகள் சேர்ந்து தான் ஒரு நாள் ஆகும். இந்த ஆறு பொழுதுகளே சிறு பொழுதுகள்.

முத்து :—அம்மா பெரும் பொழுதுகளும் உண் டோ ?

தாய் :—ஆமாம்,முத்து,சிறு பொழுதுகள் சேர்ந்து ஒரு நாள் ஆவதுபோல், பெரும் பொழுது கள் சேர்ந்து ஒருவருஷம் ஆகும்.

முத்து :—அம்மா, அது எப்படி ?

தாய் :—நாட்கள் ஏழு கொண்டது ஒரு வாரம் நான்கு வாரம் கொண்டது ஒரு மாதம் ; மாதங் கள் பன்னிரண்டு கொண்டது ஒரு வரு ஷம். ஒவ்வொரு பெரும் பொழுதுக்கும் இரண்டு மாதங்கள் ஆகும்.

முத்து :—அம்மா, பெரும் பொழுதுகளும் ஆறு தானே ?

தாய் :—ஆம், சித்திரையும் வைகாசியும் இள வேனிற் காலம் ஆனியும் ஆடியும் முது வேனிற் காலம். ஆவணியும் புரட்டாசியும் கார் காலம். ஐப்பசியும் கார்த்திகையும் குளிர் காலம். மார்கழியும் தையும் முன்பனிக் காலம். மாசியும் பங்குனியும் பின் பனிக்காலம்.

முத்து:—அம்மா, வருஷத்தை இப்படி ஏன் ஆறு பொழுதுகளாகப் பிரித்து வைத்து இருக்கிறார்கள்?

தாய் :—முத்து, சில மாதங்களில் வெய்யில் காய்கிறதையும், சில மாதங்களில் மழை பெய்கிறதையும், சில மாதங்களில் பனி மூடுகிறதையும் நீ பார்க்க வில்லையா ?

முத்து :—அம்மா, தாத்தா 'நாழி, நாழி' என்கிறாரே, அது என்ன ?

தாய் :—இரண்டரை நாழிகை கொண்டது ஒரு மணி. ஒரு நாழிகைக்கு இருபத்து நான்கு நிமிஷம். அறுபது நாழிகை அல்லது இருபத்து நாலு மணி நேரம் கொண்டது ஒரு நாள்.

வினா: 1. காலையில் ஏன் எழுந்திருக்க வேண்டும்?

2. சிறுபொழுது என்றும் பெரும் பொழுது என்றும் ஏன் பெயர்கள் வந்தன ?

3. ஆறு பெரும் பொழுதுகளையும் மூன்றிலே எப்படி அடக்கலாம் ?

4. வருஷம் எந்த மாதத்தில் பிறக்கிறது ?

7. ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டில்லை

1. ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே கம்பர் என்ற பெயரை உடைய ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெரிய புலவர்; அவர் தாமே பாட்டுக்களைச் செய்வார். அவர் இராமாயணம் என்னும் பெரிய கதையைப் பாட்டில் எழுதியிருக்கிறார். அவரை எல்லாரும் போற்றுவார்கள். அவருடைய பெருமை தமிழ் நாட்டிலே எங்கும் பரவி யிருக்கிறது.

2. இப்படிப்பட்ட கம்பர் ஒரு காலத்திலே வழிப் பிரயாணஞ் செய்தார். அப்போது வெய்யில் ஏறி விட்டது. அதனால் அவர் ஒரு மரத்தின் நிழலிலே உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். அங்கே தோட்டக்கால் பயிர் செய்யப்பட்டிருந்தது. அதற்குத் தண்ணீர் பாய்ச்சப் பண்ணையாட்கள் அவ்விடம் வந்தார்கள். அவர்கள் ஏற்றக் கோலைப் பிடித்து, 'பிள்ளையாரே வாரும், ஒருவாதியால் ஒண்ணு', என்று பாடிக்கொண்டு தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தார்கள்.

3. அந்தப் பாட்டைக் கம்பர் கேட்டுக் கொண்டே வந்தார். சிறிது நேரம் சென்றதும் பண்ணையாட்கள், 'மூங்கிலிலை மேலே' என்று சொல்லி ஏற்றத்தை விட்டுவிட்டுக் கஞ்சி குடிக்கச் சென்று விட்டனர். பாட்டைப் பொருளோடு கேட்டுக் கொண்டுவந்த கம்பருக்கு 'மூங்கில் இலை

மேலே' என்ற பாட்டை முடிக்கவேண்டு மென்று தோன்றிற்று. அதனால் அவர் பலவாறு எண்ணி யெண்ணிப் பார்த்தார். ஆனால், ஒன்றும் பொருத்தமாக அவருக்கு ஏற்பட வில்லை. அவர் அங்கேயே காத்துக்கொண் டிருந்தார்.

4. அப்பால் பண்ணையாட்கள் வந்து மறு படியும் ஏற்றத்தைப் பிடித்தார்கள். அவர்கள் பாட்டைத் தாங்கள் விட்ட இடத்திலிருந்து தொட்டுக்கொண்டு,'மூங்கிலிலை மேலே தூங்கும் பனி நீரே' என்று பாடினார்கள். கம்பருக்கு அது பொருத்தமாக இருந்தது. பிள்ளைகளே மூங்கில், இலை மேலே இருக்கும் பனி நீரை நீங்கள் பார்த் திருக்கிறீர்களா? அது எவ்வளவு அழகாய் இருக் கிறது நோக்குங்கள்! அப்போது கம்பர், "அட டா! ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டு இல்லை," என்று அதைப் புகழ்ந்துகொண்டே சென்றனர்.

வினா: 1. இராமாயணம் யாருடைய கதை?

2. ஏற்றம் இறைப்பவர்கள் ஏன் பாட வேண்டும்?

3. இறை, இரை: இவைகளுக் குள்ள பேதம் என்ன?

4. கம்பரைப் போன்ற புலவர் ஒருவர் பெயரைக் கூறு.



8. புறு

1. புறு ஓர் அழகான பறவை. புறுக்களில் பலவகை உண்டு. இயற்கையில் புறுக்கள் காட்டில் வாழும். புறு பாலை நிலத்துக்கு உரிய பறவை. நாம் இக்காலத்தில் புறுக்களைக் காடுகளிலும், புனங்களிலும், ஊர்ப் பக்கங்களிலும் காண்கின்றோம். காட்டில் வாழும் புறுவைக் காட்டுப் புறு என்றும், வீட்டு மாடத்தில் வாழும் புறுவை மாடப் புறு என்றும் மக்கள் சொல்லுகிறார்கள்.

2. மனிதர்கள் புறுக்களை வீட்டில் கூடுகளில் வைத்து வளர்க்கிறார்கள். அவை தங்களை வளர்ப்பவரிடம் சிறந்த அன்பைக் காட்டும். அவை மனிதர் கையி லிருக்கும் இரையை அச்சமின்றிப் பொறுக்கித் தின்னும்.

3. புறுவில் ஆடும் புறுவும் உண்டு. அதற்கு

ஆட்டப் புரு வென்று பெயர். ஆட்டப்புரு ஆடுவது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். கோவில்களிலும், கோபுரங்களிலும், நீராழி மண்டபங்களிலும், பள்ளிவாசல்களிலும் புருக் களைக் காணலாம்.

4. புருக்கள் ஆகாயத்தில் மிக உயரப் பறக்கும் வன்மை யுடையன. பந்தயப் புருக்களை நீ பார்த்திருக்கிறாயா? அவைகள் நெடுநேரம் ஆகா யத்தில் ஓய்வின்றிப் பறந்துகொண் டிருக்கும். புருக்கள் பல நிற முடையனவாக இருக்கின்றன. பொதுவாகப் புருக்கள் புகை நிற முடையன. வெண் புருக்களும், நீலப் புருக்களும், கழுத்தில் மேக.வர்ணத்தை யுடைய புருக்களும் உண்டு.

5. புருவின் தலை அதன் உடலளவுக்கு மிக வுஞ்.சிறியதாக இருக்கும். புருவின் விழிக்கு மேல் இமைக்குள் ஒரு மெல்லிய தோல் இருக்கிறது. அஃது இமையைப் போலவே மூடித் திறக்கும்.

புரு கூரிய பார்வை யுடையது. இதனால்தான் அது தொலைதூரத்தி லிருந்த போதிலும் தன் இருப்பிடத்தைக் கண்டுகொள்ளக் கூடியதா யிருக்கிறது.

6. புருவின் எலும்புகள் மிக இலேசானவை. அவைகள் குழாய்கள் போல இருக்கும். அவைகளில் காற்று நிறைந்திருக்கும். புருவின் இறகுகளும் இலேசானவைகளே. இவைகளால் புரு எளிதாகவும் விரைவாகவும் பறக்கக்கூடியதா யிருக்கிறது. புரு இறகை விரித்தால் அது ஒரு விசிறி போலத் தோன்றும்.

7. புரு கூட்டமாக வாழும் தன்மையை யுடையது. புருக்கள் ஒருங்கு சேர்ந்து அணி அணியாகப் பறந்து செல்லும். காட்டுப் புருக்கள் மரத்தில் கூடு கட்டிக்கொண்டு வாழும்.

8. ஒரே தரத்தில் ஒரு புரு இரண்டு முட்டை யிடும். அது முட்டைகளின்மேல் இரண்டு வாரம் அடைகாக்கும். அதன் பிறகு குஞ்சுகள் முட்டைகளினின்றும் வெளிவரும். பறவையின் குஞ்சுக்குப் பார்ப்பு என்றும் பிள்ளை என்றும் பெயர்.

9. புருவின் கால்களில் நான்கு விரல்கள் உண்டு. அவைகளில் மூன்று முன்னும், ஒன்று பின்னுமாக இருக்கும். இவ்விரல்கள் பொருள்

களைப் பற்றுவதற்கு உதவும். புறுக்கள் உட்கார்ந்த படியே உறங்கும். புறு ஒற்றைக் காலில் நிற்கிறதை நீ பார்த்திருக்கிருயா? அது ஏன் அப்படிச் செய்கிறது தெரியுமா? நோயை ஆற்றிக் கொள்ளக் கால்களை மாற்றி மாற்றி வைத்துக் கொள்ளும்.

10. புறு சில வேளைகளில் கரணம் போட்டுக் கொண்டு பறக்கும். அது பார்ப்பதற்கு மிக வேடிக்கையாக இருக்கும். அது மூச்சு விடுவது நமக்கு நன்ருகக் கேட்கும்.

11. பழகிய புறுக்கள் சாதாரணமாய் வெளியே பறந்து சென்று திரும்ப வீடு வந்து சேரும். புறுவுக்கு முக்கிய ஆகாரம் தானியங்களே.

12. முற்காலத்தில் புறு, கிளி, பூவை இவைகளின் காலில் ஓலைகளை எழுதிக் கட்டி அவைகளைத் தூதாக விடுத்தார்கள் என்று சொல்லுகிருர்கள்.

புறு—புறவு	கரா—கரவு
சுரு—சுறவு	நிலா—நிலவு
இரா—இரவு	இரு—இறவு

இளமைப் பெயர்கள்

யானை—குஞ்சரம், குழவி, கன்று.
பறவை—பார்ப்பு, பிள்ளை.
ஆமை—பார்ப்பு.
முதலை—பார்ப்பு.
அணில்—குட்டி, பிள்ளை.
தவளை—குட்டி.
புலி—குருளை, குட்டி.
ஆடு—மறி, குட்டி.
மான்—மறி, குட்டி.
குரங்கு—பறழ், குட்டி.
குதிரை—கன்று, குட்டி.
கழுதை—கன்று, குட்டி.
ஆன்—கன்று.
எருமை—கன்று, குழவி.
ஒட்டகம்—கன்று.
மனிதன்—குழவி, மகவு.
கமுகு—பிள்ளை, கன்று.
தென்னை—பிள்ளை, கன்று.

வினா: 1. புறாவைப்போல் அழகான பறவைகள் எவை?

2. புறா மக்களுக்கு எப்படி உதவுகின்றது?

3. பறவைகள் பறப்பதைப் பார்த்து என்ன யந்திரம் இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்?

4. கூட்டமாக வாழும் பறவைகள் எவ்வெவை?

5. ஐவகை நிலங்களில் ஒவ்வொன்றுக்கும் உரிய பறவை ஒவ்வொன்று சொல்லுக.

9. எல்லாம் இறைவன் செயல்

வேப்ப மரத்தின் கிளை ஒன்றில்
விருப்ப முடனே இரண்டு புறு
இன்புடன் அமர்ந்து விளையாடி
இருப்பதைக் கண்ட ஒரு வேடன்
அவற்றைக் கொன்று தின்றிட வே
அந்தோ ! பாவி அம்பெடுத் தான். (க)

அந்த வேளூர் இராஜாளி
அவற்றை நோக்கி வட்ட மிட்டே
எப்போ தந்த இருபு றவும்
எழும்பும் என்றே இருந்த துவே. (௨)
வந்த வேடன் குறி வைத்து
வளைத்து வில்லைச் சரி வைத்து
வேப்ப மரத்தை யேபார்த்து
மெல்ல மெல்ல அடிபெ யர்த்து
செல்லச் செல்லப் புற்ற ருகே
சீறி எழுந்த பாம்பொன்றை
அறியா வேடன் மிதித்திடவே
அரவும் அவனைக் கடித்திடவே
விட்டான் கணையை விரைவாக
விழுந்தான் புவியுல் பிணமாக
ஓடிய அம்பும் இராஜாளி
உடலில் தைத்தே உருவியதே. (௩)
மரத்தில் இருந்த புறவிரண்டும்
மரணம் தப்பிப் பிழைத்தனவே
நல்லது நினைக்கின் நலம் பெறுவாய்
தீயது நினைக்கின் தீ துறுவாய்
மன்னுயிர் எல்லாம் உன்னுயிர் போல்
மதித்து நடப்பது மதி யாகும். (௪)

10. மூடன் நட்பு ஆகாது

1. கலியாணப் பிள்ளை ஒருவன் தன் நண்பனை மாப்பிள்ளைத் தோழனாக அழைத்துக் கொண்டு மாமியார் வீட்டுக்குப் போனான். கலியாணப் பிள்ளைக்குத் தலைப்பாகை ஒன்று தவிர மற்ற உடைகள் எல்லாம் இரவல். அதனால் அவன் தோழனைப் பார்த்து, "அப்பா, மாமியார் வீட்டிலே என் உடைகள் எல்லாம் இரவல் என்று சொல்லாதே," என்று சொல்லிவைத்தான். அவனும் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக் கொண்டான்.

2. பின்பு கலியாணப் பிள்ளை தோழனோடு மாமியார் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அப்போது மாமியார் வந்து உபசாரஞ் செய்தாள். மாமனார் தோழனைப் பார்த்து, 'தம்பி, நன்றாய் இருக்கிறாயா? மாப்பிள்ளையின் யோக க்ஷேமம் எப்படி," என்று விசாரித்தார். உடனே தோழமாப்பிள்ளை, "மாப்பிள்ளைக்குப் பாகை மாத்திரம் சொந்தந்தான்; மற்றத் துணிகளைப் பற்றி என்னைக் கேளாதீர்கள்," என்று சொன்னான். மாப்பிள்ளை வெட்கம் அடைந்தான்.

தோழன் - தோழி.
மணமகன் - மணமகள்.
வரன் - வதூ.

சிநேகிதன் - சிநேகிதை.
மாணவன் - மாணவி
உபாத்தியாயன்-உபாத்தியாயினி.

11. மூட நம்பிக்கை

1. ஒரு செல்வன் ஒருநாள் வெளியே போனான். அங்கே ஒரு பிரசங்கி சோடாகக் காக்கைகளை ஒருவன் விழித்தவுடன் பார்த்தால், அவனுக்கு அன்றைக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று சொன்னார். அதைக் கேட்டுக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்தான்; தன் வேலைக்காரனைக் கூப்பிட்டான். "அடா, நீ விடியற் காலத்திலே சோடாகக் காக்கைகளைப் பார்த்து வந்து என்னை எழுப்பு," என்று சொல்லி விட்டான். அவனும், "அப்படியே செய்கிறேன் பிரபு," என்று சொல்லிப் போய்விட்டான்.

2. வேலைக்காரன் மறுநாள் விடியற் காலையில் இணையாக இரு காகங்கள் இருப்பதைக் கண்டு எஜமானனிடம் ஓடிவந்து அவனை எழுப்பினான். எஜமானன் எழுந்து போய்ப் பார்க்கையில் ஒரு காகம் பறந்து போய்விட, மற்றொரு காகம் மட்டும் இருந்தது. அப்போது எஜமானனுக்குக் கோபம் உண்டாகிவிட்டது. "அடா! ஒரு காகம் போகிறதற்கு முன்பே ஏன் எழுப்பாமற் போனாய்?" என்று வேலைக்காரனை நையப் புடைத்தான். அப்போது வேலைக்காரன், "ஐயா, இரண்டு காகங்களைப் பார்த்த எனக்கு வந்த பலனை இதோ பார்க்கிறீர்களே; இன்னும் ஏன் அதற்காகக் கவலைப் படுகிறீர்கள்?" என்றான். அதைக் கேட்டு எஜமானன் வெட்கினான்.

12. இலக்கணம்

I

1. நான் ஒரு சிறுவன்.
2. நான் ஒரு சிறுமி.
3. நீ என் தம்பி.
4. நீ என் தங்கை.
5. அவன் என் தமயன்.
6. அவள் என் தமக்கை.
7. அது என் எருது.
8. இது என் பசு.
9. ஒருவன் ஆட்டம் ஆடினன்.
10. ஒருத்தி பாட்டுப் பாடினள்.

II

1. நான் நேற்றுச் சோலைக்குப் போனேன்.
2. தோட்டக்காரன் என்னைக் கண்டான்.
3. என்னல் அவனிடம் பேச முடியவில்லை.
4. அவன் எனக்கு நன்ருகத் தெரிந்தவன்.
5. அவன் என்னிடமிருந்து ஒரு துணியை வாங்கிக் கொண்டான்.
6. எனது துணி அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.
7. என்னிடத்தில் அவன் இரண்டு இளநீர்க் காய்களைக் கொடுத்தான்.
8. இராமா! நீ காட்டுக்குப் போய் விட்டாயா!

9. நீ - உன்னை, உன்னால், உனக்கு, உன்னிடமிருந்து, உன்னுடைய, உனது, உன்னிடத்தில்.

10. அது - அதனை, அதை, அதனால், அதற்கு, அதனினின்று, அதனுடைய, அதனில்.

11. அவை - அவற்றை, அவற்றால், அவற்றிற்கு, அவற்றின், அவற்றினது, அவற்றினுடைய, அவற்றினிடத்தில்.

குறிப்பு:—இது போலவே இது, எது, இவை, எவை முதலியவற்றைச் சொல்லிக் காட்டலாம்.

III

1. ஒருவர் மீசை வைத்துக்கொண்டு இருந்தார்.

2. ஒருவர் கொண்டை போட்டுக் கொண்டு வந்தார்.

3. ஒற்றைக் காக்கை ஓடி விட்டது.

4. இரட்டைக் காக்கைகளை இன்று கண்டேன்.

5. அரசனுக்குப் பட்டத்து யானை ஒன்று உண்டு.

6. தசரதனுக்கு மந்திரிமார் இருவர்.

7. சேர சோழ பாண்டியர் மூவர்.

8. இராமன் கொண்டு வந்த பழங்கள் நான்கு.

9. தசரதனுக்குப் புதல்வர் நால்வர்.

10. பாண்டவர் ஐவரும் பாஞ்சால நாட்டுக்குச் சென்றனர்.

11. ஒரு நாள் அறுவர் ஊர்ப்பயணம் போயினர்.

12. வள்ளல்கள் எழுவரில் ஒருவரைச் சொல்லு.

13. திக்குப் பாலகர் எண்மரில் இந்திரன் ஒருவன்.

14. ஒன்பது பேர்—ஒன்பதின்மர்.
பத்துப்பேர்—பதின்மர்.
பதினொரு பேர்—பதினொருவர்.
பன்னிரண்டு பேர்—பன்னிருவர்.

15. ஒன்று+ஒன்று=ஒவ்வொன்று.

16. ஒருவர்+ஒருவர்=ஒவ்வொருவர்.

17. இரண்டு+இரண்டு=இவ்விரண்டு.

18. மூன்று+மூன்று=மும்மூன்று.

19. நான்கு+நான்கு=நந்நான்கு.

20. ஐந்து+ஐந்து=ஐவைந்து, ஐயைந்து.

21. ஆறு+ஆறு=அவ்வாறு.

22. எழு+எழு=எவ்வேழு.

23. எட்டு+எட்டு=எவ்வெட்டு.

24. பத்து+பத்து=பப்பத்து.



13. நாயும் பூனையும்

(முதற் பாகம்)

கண்ணனும் பொன்னனும் இணைபிரியாத நண்பர்கள். இவர்களிருவரும் ஒரு நாள் சிங்கார வனத்துக்குச் சென்றனர். அங்கே உள்ள உயர்ந்து ஓங்கிய மரங்களையும், அடர்ந்து செழித்த செடிகளையும், நெருங்கிப் படர்ந்த கொடிகளையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர். குயில் கூவுவதையும், கிளி பேசுவதையும் கேட்டும், மயில் ஆடுவதைப்பார்த்தும் சந்தோஷ மடைந்தனர். பின்பு வேடிக்கையாக இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பொன்னன் :—கண்ணு, நாம் இருவரும் எவ்வளவு அன்பாக இருக்கின்றோம். இதுபோலவே நாம் ஏன் எல்லாரிடத்திலும் அன்பாக இருக்கக் கூடாது.

கண்ணன் :—நண்பா, நாம் ஒரே இடத்தில் பிறந்து ஒன்றாக வளர்ந்து ஒரே பள்ளிக்கூடத்தில் படித்து வருவதால் ஒருவரை யொருவர் நேசிக்கின்றோம். இப்படியே நாம் எல்லாரையும் நேசிக்க முயல வேண்டும்.

பொன்னன் :—நாம் நம்போன்ற மனிதர்களையே யல்லாமல் எல்லாப் பிராணிகளையும் நேசிக்க வேண்டும். இதற்காகத்தான் சிலர் பூனையையும் நாயையும் வளர்க்கிறார்கள்.

கண்ணன் :—பொன்னு, உனக்குப் பைத்தியமா! பூனையை எலி பிடிப்பதற்கும், நாயைத் திருடனைக் கடிப்பதற்கும் வளர்க்கிறார்கள்; அன்பினாலேயா வளர்க்கிறார்கள்.

பொன்னன் :—அப்படிச் சொல்லலாமா! எத்தனை பேர் தாங்கள் வளர்க்கும் பிராணிகளிடத்தில் உயிரை வைத்துக்கொண் டிருக்கின்றார்கள்; அவைகட்கு வேளை தவறாமல் சோறூட்டுகிறார்கள்; அவைகளைக் கழுவிக் குளிப்பாட்டுகிறார்கள்; மடியிலே வைத்துக் கொண்டு மகிழ்கிறார்சள்; அவைகளுடன் கொஞ்சி விளையாடுகிறார்கள்; இவைகளை யெல்லாம் அன்பினாலல்லவோ செய்கிறார்கள்.

கண்ணன்:—அப்படி நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஜனங்கள் பொழுது போக்குக்காக இவ்வாறு அவைகளிடம் அருமை பாராட்டுகிறார்கள். அவர்கள் அன்பினால் அப்படிச் செய்வதானால், எல்லாப் பிராணிகளிடத்தும் இப்படியே இருப்பார்கள் அப்படியின்றி, தன் வீட்டுப் பூனையைத் தழுவிக் கொள்ளுகின்றவன், அடுத்த வீட்டுப் பூனையை இடிப் பொடிய அடிப்பானேன்! ஒருவன் ஒரு பிராணியை வைத்து வளர்ப்பது, எல்லாப் பிராணிகளிடத்தும் அன்பை வளர்ப்பதற் கல்லவா?

பொன்னன்:—ஆம், அது தான் கருத்து. நீ ஏதாவதொரு செல்வப்பிள்ளையை வளர்க்கலாமே.

கண்ணன்:—எனக்கும் அது விருப்பந்தான். ஆனால் பறவைகளை வளர்க்க எனக்கு இஷ்டமில்லை. காட்டில் தன் விருப்பமாய்ப் பறந்து திரியும் பறவைகளை ஒரு கூட்டில் அடைத்து வைப்பது எவ்வளவு பாவம்!

பொன்னன்:—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? கிளிப்பிள்ளைகள் காட்டில் இருந்தால் பேசப் பழகுமா? அவைகளைப் பேசப் பழக்கினால் எவ்வளவு நன்றாகப் பேசுகின்றன! ஒரு கிளி பாடவுங் கேட்டேனே!

கண்ணன் :—கிளி பாடுவது உனக்கு இன்பமாகத் தான் இருக்கும். விலங்குகளைக் கொண்டு வந்து குட்டிக் கரணம் போடவைத்தால் உனக்கு ஆனந்தந்தான். அதனால் அவைகளுக்கு உண்டாகும் துன்பம் உனக்குத் தெரியுமா !

பொன்னன் :—என்ன துன்பம் ! காட்டிலே இரை தேடுவது அவைகளுக்குத் துன்ப மல்லவா ? இங்கே அவைகளுக்கு இரை தேடுகிற துன்பமே இல்லையே !

கண்ணன் :—உன்னைச் சிறைச்சாலையில் இட்டுப் பாலுஞ் சோறும் கொடுத்து வந்தால் நீ சந்தோஷப் படுவாயா ?

பொன்னன் :—நல்லது, அதெல்லாம் இருக்கட்டும். நீ பறவைகளை வளர்க்க வேண்டாம். அவைகளைத்தான் கூட்டில் அடைக்க வேண்டும் ; பறந்து போகாமல் பார்க்க வேண்டும் ; பூனை வராமல் காக்க வேண்டும். தன் இச்சையாக ஓடியாடித் திரிகின்ற பூனையோ, நாயோ, குரங்கோ, மானோ ஏதாவ தொன்றை வளர்க்கலாமே.

கண்ணன் :—அப்பப்ப ! நன்றாய்ச் சொன்னாய் ! குரங்கையா வளர்க்க ! அதனை அடக்க முடியுமா ! குரங்கு செய்யும் சேஷ்டையை நீ

பார்த்த தில்லையா? மானையும் எனக்கு வளர்க்க முடியாது. செல்வர்கள் அதை வளர்க்க வேண்டும். பூனை செய்வது துடுக்கு, அடித்தால் பாவம். அதுவும் எனக்கு வேண்டாம். பூனை பார்த்தால் சாதுவாகத் தோன்றும். அதற்கு நல்ல எண்ணம் இல்லை. உருத்திராட்சப்பூனைக் கதையைக் கேட்ட தில்லையா? நாய் நன்றியறிவுள்ள ஜெந்து. அதைத் தான் நான் வளர்ப்பேன்.

பொன்னன் :—நல்லது, நாயை நீ மெச்சுகிறாய். அப்படியே நீ நாயை வளர்த்துப் பார். எனக்கு நாயினுடைய முரட்டுத் தன்மை பிடிக்க வில்லை. நான் மென்மைத் தன்மையுடைய பூனையை வளர்க்கிறேன். உனக்கு நாயினிடம் உள்ள குறைகளும், பூனையினிடமுள்ள குணங்களும் தெரியவில்லை. நான் சொல்லுகிறேன் கேள்.

கண்ணன் :—சரி, சொல். அப்படியே கேட்கிகிறேன்.

———

14. நாயும் பூனையும்

(இரண்டாம் பாகம்)

பொன்னன் :—பூனை எவ்வளவு மென்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கிறது! பூமி அதிராமல் மெத்தென்று நடக்கிறது. அதனுடைய மயிர் மிருதுவாகவும் அழகாகவும் இருக்கிறது. அதிலும் வெள்ளைப் பூனையைக் கண்டால் எனக்கு மிகவும் விருப்பம்.

கண்ணன் :—'பொரிமாவை மெச்சினான் பொக்கை வாயன்' என்பதுபோல நீ பூனையை மெச்சிப் பேசுகிறாய். பூனைக்கிருக்கிற அழகு நாய்க் கில்லையா? மேலும் அது ஓசை படாமல் நடக்கிறது என்கிறாய். அதற்கு நகங்கள் உள்ளே அடங்கியிருப்பதால் அப்படி நடக் கின்றது. அதில் என்ன விசேஷம்; எனக்குக் கறுப்பு நாயைக் கண்டால் அதிக ஆசை.

பொன்னன் :—அப்பா! நாயைப் பார்க்கும் போதே பயமாயிருக்கிறது. யாராவது வந்து விட்டால் வள்வள் ளென்று குரைத்துக் கொண்டு மேலே விழுகிறது. நாய் இருக்கும் வீட்டுக்குப் போகிறவன் நடுங்கிக் கொண்டு போக வேண்டும். பூனை மனிதர்களை யொன் றுஞ் செய்வ தில்லை.

கண்ணன் :—நாய் ஆண்மை யுடையது. ஆண்மை முரட்டுத் தனமாகுமா? பாவம்! பூனை மரத்தின் மேலிருக்கும் குருவிகளைக் கூடப் பிடித்துச் சிதைத்து விடுகின்றது. மனிதர்களுக்குப் போய்விட்டாயே!

பொன்னன் :—பூனையைப் பால் ஒன்றினாலேயே வளர்த்து விடலாம். பால் என்றால் அதற்கு மிகவும் விருப்பம். நாய்க்கோ இறைச்சி வேண்டும்.

கண்ணன் :—அப்படி யில்லை. நாய் எதை வைத்தாலும் தின்னும். பூனையைப்போல அதற்கு ஒன்றில் அதிகப் பிரியமும் இல்லை. பூனைக்கிருக்கும் துடுக்கு நாய்க் கில்லை. அதன் நாக்கைப் பார். பொருக்குப் பொருக்காக இருக்கிறது. எலும்பினுள்ள சதையை நக்கியே தீர்த்து விடுகிறது.

பொன்னன் :—நாயின் நாக்கு மிருது வென்கிறாயோ? அதிலுள்ள பிளவுகளைப் பார்க்கவில்லையோ! நாய் நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு ஓடும்போது எவ்வளவு விகாரமாக இருக்கிறது பார்!

கண்ணன் :—விகாரமாகவா இருக்கிறது! நாய்க்கு வியர்வை நாக்கின் வழியாக வெளிப்படுகிறது. அதனால் அது ஓடும்போது நாக்

கைத் தொங்க விட்டுக் கொள்ளுகிறது. பூனை பகற் குருடாயிருப்பது உனக்கு விகாரமாகத் தோன்ற வில்லையோ !

பொன்னன்:—பூனையா, பகற் குருடு ! அதற்குப் பகலில் கண்விழி சுருங்கிக் கீற்றுப் போலாகும். அதனால் அதற்கொரு இடையூறுமில்லை. அது இரவில் அரசு செய்கிறதே. காட்டுக்குப் புலி, வீட்டுக்குப் பூனை என்பதைக் கேட்டதில்லையா ! பூனையைப் போல் நாய் இரவில் பார்க்க முடியுமா ? பூனையின் கண் இரவில் கோமேதகம் போல் விளங்குகின்றது.

கண்ணன்:—அரசா செய்கிறது, அல்லற்படுத்துகிறது. அதனால் இரவில் எத்தனை பேருக்குத் தூக்கங் கெடுகிறது தெரியுமா? நாய் இரவில் பார்க்க வேண்டியதே இல்லையே. நாய் மோப்பம் பிடித்தே எதையும் தெரிந்து கொள்ளுமே. குடுவை மூஞ்சிப் பூனையைக் கொண்டாடுகிறாயே.

பொன்னன்:—ஆனால் நீ ஊசி மூஞ்சி நாயை உயர்த்திப் பேசு. பூனைக்குச் சொல்லவேண்டுமானால் எவ்வளவோ சிறப்புக்கள் இருக்கின்றனவே. பூனைக்குத் தன் உடம்பைச் சுருக்கிக் கொள்ளத் தெரியுமே. சந்துகளின்

அகல நீளங்களை அது தன் மீசையினுல் அளந்து தெரிந்து கொள்ளுமே. மிருகேந்திரனுகிய சிங்கத்தின் வமிசத்தைச் சேர்ந்த தல்லவா பூனை. நரியுங் கோணுயுமா இதன் பந்துக்கள்! புலியைப் போலவே பூனையும் பாயும். ஆனுல் புலிக்குந் தெரியாத மர மேறும் வித்தை பூனைக்குத் தெரியும். திருடன் மரத்தின்மேல் ஏறி விட்டால் நாய் என்ன செய்யும்.

கண்ணன் :—போதும்! போதும்! பூனை இடத்தை விரும்புமே அல்லாமல் மனிதர்களை விரும்பாது. இதைக் காட்டிலும் கெட்ட குணம் வேண்டுமா! நாயோ மிகவும் நன்றியறிவுள்ளது; நாயை எஜமானன் கத்தியால் குத்தினுற்கூட வாலைக் குழைத்துக் கொண்டு எதிரில் நிற்கும். நாய் தன் துணிவினுல் அருஞ் செயல்களைச் செய்து எத்தனை பெயரைக் காப்பாற்றி யிருக்கிறது! நாய் நீரில் விழுந்தவர்களை நீந்திச் சென்று கரை சேர்த்து இருக்கிறது. பூனை தண்ணீரைக் கண்டால் தவிக்கும். நாய் எஜமானன் எங்கே இருக்கிருனே அங்கே இருக்கும். இதனுலல்லவோ பெரியோர்கள் நாய் போன்றவர்களோடு நட்புக் கொள்ளவேண்டு மென்று சொல்லி யிருக்கிருர்கள்.

பொன்னன் :—நல்லது. பேச்சில் நேரம் ஆனது கூடத் தெரியவில்லை. எங்கேயோ தொடங்கி எங்கேயோ வந்து சேர்ந்தோம். ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு வகையில் சிறந்ததே. கடவுள் அததற்கு வேண்டியபடி அமைத்திருக்கிறார். வா, போவோம். நீ நாயையே வளர்ப்பாயாக. நான் பூனையை வளர்க்கிறேன்; வந்தனம்; போய் வருவோம்.

இருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருந்து பிறகு சிங்கார வனத்தை விட்டுத் தங்கள் தங்கள் வீடு போய்ச் சேர்ந்தனர்.

வினா: 1. நாய், பூனை இவைகளின் உறுப்புக்களில் என்னென்ன வேறுபாடுகள் காணப்படுகின்றன?

2. உறுப்புக்களின் வேறுபாட்டால் அப்பிராணிகளின் தன்மைகள் எவ்வாறு மாறுபடுகின்றன?

3. நீ நாயை வளர்ப்பாயா? பூனையை வளர்ப்பாயா? ஏன்?

4. நாய், பூனை இவை ஒவ்வொன்றின் இனத்தைச் சேர்ந்த மற்ற மிருகங்கள் எவை?

5. அவன் நாய்; இவன் பூனை—என்று சொல்வதின் கருத்து என்ன?

6. பயிர்த்தொழில் செய்பவர்களுக்கும், ஆடு மாடு மேய்ப்பவர்களுக்கும் நாய் அவசியமா? ஏன்?

15. நன்றியுள்ள நாய்

1. ஒரு கிராமத்தில் ஓர் உழவன் இருந்தான். அவனுக்கு ஒரு நாய் உண்டு. அது அவன் கூடவே இருக்கும்; அவனுடன் வயலுக்குப் போகும்; வயலில் ஆடு மாடுகள் மேய்ந்தால் அவைகளை ஓடித் துரத்தும்.

2. உழவன் ஒரு நாள் காய்ச்சலாய் வீட்டில் இருந்து விட்டான். மாலை வரையில் அவன் வயலுக்குப் போகவில்லை. தலைவனுக்குப் பதிலாக வயலைப் போய்ப் பார்க்க நாய் நினைத்தது. நினைத்து அது உடனே புறப்பட்டது.

3. ஊருக்கும் வயலுக்கும் இடையில் ஓர் ஆறு ஓடியது. மனிதர் படகில் ஏறி அக்கரைக்குப்

போவார்கள். பொழுது போய் விட்டது. படகு தள்ளுவோர் யாரும் இல்லை. நாய் தானே ஆற்றைக் கடக்க அதில் இறங்கிற்று. அந்த நதியில் முதலைகள் மிகுதியாய் இருந்தன. ஆனாலும் அந்த நாய் சிறிதும் அஞ்சாமல் ஆற்றில் நீந்திப் போனது.

4. நாய் ஆற்றின் நடுவில் போகையில் முதலைகள் வருவதைக் கண்டுவிட்டது. கண்டதும் நாய் விரைவாய் நீந்திப்போய் அக்கரை சேர்ந்து விட்டது. எப்படியோ நாய் முதலைகளின் வாயினின்றும் தப்பித்துக் கொண்டது.

5. பின்பு நாய் வயலைப் போய்ப் பார்த்தது. அங்கே ஆடு மாடுகள் ஒன்றும் இல்லை. பிறகு அது வீட்டை நோக்கி ஆற்றங்கரையை அடைந்தது. போனபோது முதலைகளால் பட்ட துன்பத்தை அது மறக்கவில்லை. அதனால் அது கரையின்மேல் நின்று குரைக்க லாயிற்று. நாய் சிறிது நேரம் அவ்வாறே குரைத்துக் கொண்டு கரையின் மேல் இங்கும் அங்கும் திரிந்தது.

6. நாயின் குரலைக் கேட்டு முதலைகள் எல்லாம் கரையோரம் வந்து ஒன்றாய்ச் சேர்ந்தன. பிறகு நாய் குரைக்க வில்லை. அது கரையில் உள்ள புதர்களில் மறைந்து கொண்டே நெடுந்தூரம் ஓடிற்று. அப்பால் அது ஓர் இடத்தில் நின்று தண்ணீரைப் பார்த்தது. முதலைகளின் ஓசை

அங்கே கேட்க வில்லை. உடனே நாய் நீரில் இறங்கிச் சரேலென்று ஆற்றைத் தாண்டிவிட்டது.

7. நாய் நதியைக் கடந்ததும் ஒரே ஓட்டமாய் ஓடி வீடு சேர்ந்தது. வீட்டில் தலைவனுக்கு எதிரில் வாலைக் குழைத்துக்கொண்டு நின்றது.

8. உழவன் நாயின் உடம்பு நனைந்து இருந்ததைக் கண்டான்: நாய் வயலண்டை போய் வந்தது என்று அறிந்து அவன் மகிழ்ச்சி அடைந்தான். மறுநாள் உழவன் நாயின் துணிவையும் சூழ்ச்சியையும் பிறரால் கேள்விப்பட்டான். அவன் தன் அன்புள்ள நாயை ஆனந்தத்தோடு தழுவிக்கொண்டான்.

II. நாய்ப் பாட்டு

என் அருமைக் கறுப்பன்
என்னிடமே இருப்பன்.

1. வாலை யாட்டி எழுவான்
வந்து மேலே விழுவான்.
அன்பரிடம் சாய்வான்
அயலார்மேற் பாய்வான். (என்)

2. வீட்டைக் காவல் பார்ப்பான்
விளையாடி ஆர்ப்பான்.
நன்றிமிகப் பெற்றான்
நன்மை யொன்றே கற்றான். (என்)

16. உருத்திராக்ஷப் பூனை

1. பாகீரதி தீரத்தில் திரிகூடம் என்னும் மலை ஒன்று உண்டு. அந்த மலையிலே ஒரு பழைய அத்தி மரம் இருந்தது. அதன் பொந்தில் ஒரு கிழக்கழுகு வாழ்ந்து வந்தது. அதற்குக் கண் தெரியாது ; நகமும் இல்லை. கிழமானபடியால் மற்றப் பறவைகள் அதனிடம் இரக்கம் வைத்தன. அவை கழுகுக்குத் தங்கள் இரையிலே கொஞ்சங் கொஞ்சம் நெருக்கிக் கொடுத்து வந்தன.

2. இப்படியிருக்கையில் ஒரு பூனை பறவைக் குஞ்சுகளைத் தின்பதற்கு அந்த மரத்தின் கீழே வந்தது. பூனையைப் பார்த்துக் குஞ்சுகள் பயந்து பெருங் கூச்சல் இட்டன. கழுகு அதைக் கேட்டு, " நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் ?" என்று கேட்டது. அதற்குள் பூனை முதலிலே திகில் அடைந்து பின்பு தைரியம் பண்ணிக்கொண்டது. அது கழுகின் எதிரே போய், " சமர்த்தனே, உனக்கு வணக்கம்," என்றது.

கழுகு :— நீ யார் ? இங்கே ஏன் வந்தாய் ?

பூனை :— நான் நெட்டைக்காதன் என்னும் பூனை.

கழுகு :— நீ இப்பொழுதே ஓடிப்போய்ப்பிழை ; இல்லாவிட்டால் செத்தாய் !

பூனை :— நான் உன்னைத் தரிசிக்கவே இவ்வளவு தூரம் வந்தேன். நான் சொல்வதை முழு

தும் கேட்டுப் பிறகு என்னைக் கொல்லவேண்டுமானால் கொன்றுவிடு. என் ஜாதியைப் பார்த்து என் நடத்தையைத் தீர்மானிக்கக் கூடாது. நான் கங்கா தீரத்திலே ஒவ்வொரு நாளும் முழுகி விரதம் செய்து வருகிறேன்; நீ தருமவான் என்று கேள்விப்பட்டேன்; உன்னிடம் தருமம் கேட்டு நன்மை அடையலாம் என்று வந்தேன்.

கழுகு:—இறைச்சியைத் தின்பதும் கொலை செய்வதும் உன் குலத்துக்கு உரிய குணங்கள் என்று அப்படிச் சொன்னேன்.

பூனை:—சிவ சிவா! நான் பொல்லாத கொலையை விட்டுப் புண்ணியம் தேடிக் கொண்டிருக்கிறேன். கொலையைப் போலப் பாவம் இல்லை என்று அறிந்தேன். அது முதல் காய் கனி கிழங்குகளையே நான் உண்டு வருகிறேன்.

கழுகு:—அப்படியானால் நீ இங்கேயே இருக்கலாம்.

அந்தப் பூனை அன்று முதல் பறவைகளினுடைய குஞ்சுகளைக் கொன்று அங்கே கொண்டு வந்து தின்றிருந்தது. அப்போது பறவைகள் தங்களுடைய குஞ்சுகள் இல்லாமையால் வருந்தி ஒன்று கூடின. அவை தங்கள் குஞ்சுகள் எங்கே என்று தேடின. பூனை இந்தச் சங்கதி தெரிந்து

அவ்விடம் விட்டு ஓடிப் போய்விட்டது. பறவைகள் தேடிக்கொண்டு கழுகின் பொந்தண்டை வந்தன. அந்தப் பொந்திலே அவை குஞ்சுகளுடைய எலும்புகளும் சிறகுகளும் விழுந்து கிடப்பதைக் கண்டன. அப்பொழுது அவை, "இந்தக் கழுகு நன்றி யில்லாமல் இப்படிச் செய்தது," என்றெண்ணி அதைக் கொத்திக் கொன்றன. உருத்திராக்ஷப் பூனையைக் கழுகு நம்பி இடங்கொடுத்ததால் தன்னுடைய உயிரை இழந்தது.

---

17. பழமொழி வரிசை

1. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.

2. ஆழம் அறியாமல் காலே விடாதே.

3. இளமையிற் கல்வி சிலேயில் எழுத்து.

4. ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாள மட்டும் பாயும்.

5. உண்மை சொல்லிக் கெட்டாரும் பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லே.

6. ஊர் வாயை மூட உலேமூடி இல்லே.

7. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.

8. ஏறச்சொன்னுல் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னுல் நொண்டிக்குக் கோபம்.

9. ஐந்தில் வளேயாதது ஐம்பதில் வளேயுமா ?

10. ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

11. ஓட்டைச் சட்டியானாலும் கொழுக் கட்டை வேகாதா?

12. ஔவையார் மேலும் குற்றம் உண்டு, அண்ணாவியார் மேலும் பழுது உண்டு.

13. கங்கையிலே முழுகினாலும் காக்கை அன் னம் ஆகுமா?

14. சட்டியில் இருந்தால் தானே அகப்பை யில் வரும்?

15. ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலே.

16. டில்லிக்குப் பாக்ஷா தல்லிக்குப் பிட்டா.

17. தண்ணீரில் இறந்தவரிலும் சாராயத் தில் இறந்தவர் அதிகம்.

18. நத்தையின் வயிற்றில் முத்துப் பிறக்கும்.

19. பசியுள்ளவன் ருசி அறியான்.

20. மடியில் கனமிருந்தால் வழியில் பயம்.

21. யாராலே கெட்டாய்? நோராலே கெட்டேன்.

22. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

23. வாய் நல்லதானால் ஊர் நல்லதாகும்.

24. விளையும் பயிர் முளையில் தெரியும்.

25. விருந்தும் மருந்தும் மூன்று வேளை.



18. நெருப்பு

1. தண்ணீரைத் தொட்டால் குளிர்ச்சியாக இருக்கும். நெருப்பைத் தொட்டால் சுடும். நெருப்பு நமக்குப் பல வழியாகப் பயன்படுகிறது. நெருப்பின் உதவியைக் கொண்டே நாம் சோறு சமைக்கிறோம்; தண்ணீரை வெந்நீராகக் காய்ச்சுகிறோம்; வெண்ணெயை உருக்கி நெய் எடுக்கிறோம்.

2. கருமார் உலைக்களத்தில் இரும்பை நெருப்பில் காய்ச்சி வளைத்தும் நீட்டியும் பல கரு

விகளைச் செய்கிறார்கள். தட்டார் பொன்னை நெருப்பிலே உருக்கிப் பல ஆபரணங்களைச் செய்கிறார்கள். கன்னார் செம்பு பித்தளைகளை நெருப்பில் உருக்கிப் பாத்திரங்கள் செய்வார்கள்.

3. நெடுங்காலத்துக்கு முன் மக்கள் காய் கிழங்குகளைப் பச்சையாகவே தின்று வந்தார்கள். அப்போது அவர்களுக்கு நெருப்பே தெரியாது. கொஞ்ச காலத்துக்குப்பின் மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்பு உண்டாவதைக் கண்டார்கள். அதிலிருந்து கட்டையோடு கட்டையைத் தேய்த்து நெருப்பை உண்டாக்கிக்கொள்ளும் வகையைத் தெரிந்துகொண்டார்கள். பிறகு விறகிலிருந்து தீயைக் கடைந்து எடுத்தார்கள். கடைவதற்கு உதவியாக ஒரு கோலை அமைத்துக் கொண்டார்கள். அதற்குத் தீக்கடை கோல் என்று பெயர்.

4. சிறிது காலம் சென்ற பிறகு மனிதர்கள் ஒரு வகையான கல்லைக் கண்டுபிடித்தார்கள். அந்தக் கல்லுக்குச் சக்கிமுக்கிக் கல் என்று பெயர். சக்கிமுக்கிக் கல்லை இன்னொரு கல்லின்மேல் தட்டினால் நெருப்பு உண்டாகும். உரலில் உலக்கையைப் போட்டுக் குத்தும்போது சில சமயங்களில் நெருப்பு உண்டாவதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

5. இப்பொழுது நாம் நெருப்புக்காக என்ன செய்கிறோம். நெருப்பு என்று நினைக்க வேண்டியதுதான்; வந்து விட்டது நெருப்பு! நம் முன்னோர்கள் நெருப்புக்காகப் பட்ட பாடு நாம் பட வேண்டாம். ஒரு தீக்குச்சியை எடுத்துக் கிழித்த மாத்திரத்தில் நெருப்புச் சுடரைக் காண்கிறோம்.

6. குச்சியில் என்ன இருக்கிறது தெரியுமா? அதன் நுனியில் கெந்தகம் இருக்கிறது. தீப்பெட்டியின் பக்கங்களில் தீப்பாஷாணம் பூசியிருக்கிறது. கெந்தகம் தீப்பாஷணத்திற் பட்டவுடனே நெருப்பு உண்டாகிறது.

7. நெருப்பிலிருந்து சுடர் உண்டாகிறது. அச்சுடர் சுடுகை உள்ளது. அது நமக்கு வெளிச்சம் கொடுக்கிறது. அந்தச் சுடரே விளக்காகும்.

வினு: 1. நீங்கள் பார்க்கும் பலவகையான விளககுகள் எவை?

2. நெருப்பில்லா விட்டால் எவ்வெவற்றை நாம் செய்ய முடியாது?

3. நெருப்போடு சேர்ந்த வேறு நான்கு இயற்கைப் பொருள்கள் எவை?

4. சில காலங்களில் மலையின் மேல் வெளிச்சம் தெரிவது ஏன்?

19. அன்னை மொழியைப் பொன்னெனப் போற்று

நாசிக தேசத்திலே தத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் தன் தாயை நோக்கி, "அன்னையே, நான் ஆரியன் வேலையாக ஓர் ஊருக்குப் போய் வருவேன்; விடைதர வேண்டும்," என்று கேட்டான். அதற்குத் தாய், குழந்தாய், ஒருவனுய்ப் போகவேண்டாம்; ஒரு துணையோடு போய் வா," என்றாள்.

தத்தன், "தாயே, வழி நன்றாக இருக்கிறது. அச்சமில்லாமல் போகலாம்," என்றான். தாய் திரும்பவும், "அப்பா, எப்படி இருந்தாலும் நீ வழித்துணை இல்லாமல் போகக்கூடாது," என்று

சொன்னாள். பின்பு அவள் ஒரு நண்டைப் பிடித்துக் கொண்டு வந்து ஒரு கலயத்தில் இட்டாள். அதன்மேல் அதை எடுத்துக்கொண்டு வந்து, இதையாவது துணையாகக் கொண்டுபோ," என்று தத்தனை வழிகூட்டி அனுப்பினாள்.

அவ்வாறே மகன் தாய் சொல்லைத் தள்ளாமல் அக்கலயத்தோடு வழி நடந்தான். அப்பால் அவன் இளைப்பாற ஒரு மரத்தின் நிழலில் படுத்துத் தூங்கினான். அங்கே எங்கிருந்தோ பாம்பு ஒன்று அவனைத் தீண்ட வந்தது. அது அருகிலே இருக்கும் மட்கலயத்தைப் பார்த்ததும் அதற்குள் தலையை நுழைத்தது. அக்கலயத்திலே இருந்த நண்டு உடனே பாம்பைத் தன் கொடுக்கால் இடுக்கிக் கொன்று விட்டது.

தத்தன் தூக்கந் தெளிந்து விழித்தான். அங்கே அரவு இறந்து கிடப்பதைப் பார்த்தான். "இந்தப் பாம்பு எப்படி இறந்தது," என்று எண்ணினான். அப்போது நண்டு பாம்பின் தலையைக் கத்திரித்திருக்கக் கண்டான். "ஆ! ஆ! இதுவே இவ்வளவும் செய்தது! மாதா கொடுத்த வழித் துணையால் பிழைத்தேன்," என்று மகிழ்ந்து, அந் நண்டைக் கலயத்திற் போட்டு எடுத்துக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

பின் தாயை வணங்கி, "அம்மையே, நீ கொடுத்த துணையால் உயிர் பிழைத்தேன்," என்று கூறினான்.

20. தாய்

1. பத்துத் திங்கள் வயிற்றினில் வைத்துப்
பரிந்து காத்தவர் ஆர்?
சித்த மகிழ்ந்து முத்த மளித்துச்
சிரித்து நின்றவர் ஆர்?

2. ஈயும் எறும்பும் என்னுடல் மொய்க்கா
திருந்து பார்த்தவர் ஆர்?
நாயும் பூனையும் காட்டி எனக்கு
நல்லமு தீந்தவர் ஆர்?

3. நான் நோய் அடைந்த போதுளம் வருந்தி
நடுக்கங் கொண்டவர் ஆர்?
தான் மருந்துண்டு பத்தியங் கொண்டு
தன்னலம் இழந்தவர் ஆர்?

4. ஆடை அணிகள் எனக்குப் பூட்டி
அகங் களித்தவர் ஆர்?
கூட இருந்து கொஞ்சிக் கொஞ்சிக்
குதலை கேட்டவர் ஆர்?

5. பாலும் பழமும் தேனும் நெய்யும்
பரிவுடன் தந்தவர் ஆர்?
காலும் கையும் கண்ணில் ஒற்றிக்
கட்டி மோந்தவர் ஆர்?

6. அத்தகு தாயின் அடிமலர் தம்மை
அன்பாய்த் தொழு கேனே!
மெத்தவும் அவரிடும் கட்டளை தலையின்
மேற்கொண் டொழு கேனே!



21. மீன்

1. மீன் நீரிலே வாழும். மினுக்கு மினுக்கென்று மின்னுவதால் இதற்கு மீன் என்று பெயர் வந்தது. வானத்தில் மின்னுகின்ற நக்ஷத்திரங்களுக்கு வான்மீன் என்று பெயர். மின்னுவதனால்தான் மின்னலுக்கு மின்னல் என்கிற பெயரும் வந்தது. எல்லா நீர் நிலைகளிலும் மீனைக் காணலாம். ஆனால் சில கிணறுகளிலும் குளங்களிலும் மீன்கள் வாழ்வதில்லை. மதுரையில் உள்ள பொற்றாமரைத் தீர்த்தத்தில் மீன் வாழ்வது இல்லை.

2. கடலில் உள்ள மீனைக் கடல்மீன் என்று சொல்லுகிறோம். அப்படியே ஏரிமீன், குளத்துமீன், ஆற்றுமீன் என்று வழங்குகிறோம். கடலில் பெரிய பெரிய மீன்கள் இருக்கின்றன. கடல் மீன்கள் மிகவும் அழகானவை. அவைகளுக்குப் பல நிறங்கள் உண்டு.

3. சில வேளைகளில் கடலில் மீன்கள் துள்ளுவதால் பளிச் பளிச் என்று ஒளி வீசும். மீன்களின் அழகைக் கண்டு ஜனங்கள் மகிழ்வதற்காகவே சென்னை நகரத்தில் கடற்கரை யோரத்தில் ஒரு மீன் காட்சித் துறை இருக்கிறது. அங்கே ஜனங்கள் திரள் திரளாகப் போய் வேடிக்கை பார்க்கிறார்கள்.

4. கடல் மீன்களில் சுறாச் சிறந்தது. சிலர் சுறாவைப்போலக் குண்டலம் செய்து காதில் அணிந்து கொள்வார்கள். அதற்கு மகரகுண்டலம் என்று பெயர். பரதவர் சுறாக்கோடு நட்டுக் கடற் கடவுளாகிய வருணனை வழிபடுவார்கள்.

5. ஏரி, குளங்களில் இருக்கும் மீன்களில் வரால், வாளை, சேற்கெண்டை, கயல் ஆகிய இவைகள் சிறந்தவை. இவைகளைப் பற்றிப் புலவர்களும் பாடி இருக்கிறார்கள். வாளையும் வராலும் பெரிய மீன்கள். வாளை மீன் மிகவும் துள்ளும். கெண்டையின் பிறழ்ச்சி மிகவும் அழகாக இருக்கும். பெண்களின் கண்களுக்குக் கயல் மீனை ஒப்பாகச் சொல்லுவார்கள். மீனாக்ஷி யென்றும், அங்கயற்கண்ணி என்றும் பெயர்கள் வழங்குவதைக் கேட்டிருப்பீர்கள் அல்லவா ?

6. மீன் தண்ணீரில் எப்படி நீந்துகிறது ? அதற்கு வயிறு பருத்தும், தலை வால் சிறுத்தும்

இருக்கும். இதனால்தான் அதற்கு நீரைப் பிளந்து கொண்டு செல்ல முடிகிறது. மீன்களுக்கு இரண்டு பக்கங்களிலும் சிறகுகள் இருக்கின்றன. அச்சிறகுகள் நீரை அடித்துக் கீழே தள்ளும். அப்படிச் செய்வதனால்தான் மீன்கள் நீரின் மேல் மிதக்கின்றன. மீன் வாலை அடித்துக் கொண்டுதான் திரும்பும். நீந்தும்போது மீனுக்குச் சிறகும் வாலும் நமக்குக் கைகால்கள் உதவுவது போல, உதவுகின்றன.



7. மீனைப் பார்த்துத்தான் மனிதர் படகு செய்யக் கற்றுக்கொண்டார்கள். படகின் துடுப்புக்கள் மீனின் சிறகுகளைப் போலத் தள்ளுவதற்கு உதவும். படகின் சுக்கான், மீனின் வாலைப் போலத் திருப்புவதற்கு உதவும்.

8. மீனின் உடலின்மேல் செதில்கள் இருக்கின்றன. இச் செதில்களே அதன் உடம்பைப்

பாதுகாக்கும். மீன் எப்படி மூச்சு விடுகிறது தெரியுமா? மீனின் வாய்க்குள் சிவப்பான ஓர் உறுப்பு இருக்கிறது. மீன் நீரை உட்கொள்ளும் போது அந் நீர் அவ்வுறுப்பின் வழியாய்ப்போய் வெளியே வரும். நீரில் கொஞ்சம் காற்றும் கலந் திருக்கிறது. மீன் உட்கொள்ளும் நீரில் இருக் கும் காற்றை அதன் வாயிலிருக்கும் அற்புதமான உறுப்புப் பிரித்து எடுத்துக் கொள்ளும். இந்த அமைப்பினுல்தான் மீன் சுவாசிக்கிறது. மீனின் தலைக்கு இரு பக்கத்திலும் காதுகள் போன்ற இரண்டு துவாரங்கள் உண்டு. அவைகளின் வழி யாகக் காற்று நீங்கிய நீர் வெளியே வந்து விடு கின்றது. மீனின் எலும்புகள் மிகச் சிறியவையா கையால் அவைகளை முட்கள் என்று சொல்லுகி ரேும்.

1. ஆறு + மீன் = ஆற்றுமீன்.
2. ஆறு + கால் = ஆற்றுக்கால்.
3. ஆறு + வழி = ஆற்றுவழி.
4. ஆறு + கரை = ஆற்றங்கரை.
5. ஆறு + நீர் = ஆற்றுநீர்.
6. நாடு + புறம் = நாட்டுப்புறம்.
7. வயிறு + வலி = வயிற்றுவலி.
8. கயிறு + உருண்டு = கயிற்றுருண்டை.
9. பயறு + காய் = பயற்றங்காய்.
10. பயறு + பருப்பு = பயற்றம்பருப்பு.
11. முரடு + வேலை = முரட்டுவேலை
12. அசடு + குணம் = அசட்டுக்குணம்.



22. வானவில்

பிள்ளைகளே, நீங்கள் வில்லைப் பார்த்திருக்கிறீர்களா? வில் எப்படியிருக்கும்? வில் வளைந்திருக்கும். வானத்தில் சில காலங்களில் தோன்றும் வளைவைக் கண்டதுண்டா? அந்த வளைவு வில்லைப்போல் இருந்தால் அதை வில்லென்று சொல்லலாமல்லவா? அது வானத்தில் இருப்பதனால் அதை நாம் வானவில் என்று சொல்லுகிறோம்.

2. சில சமயங்களில் சூரியனையும் சந்திரனையுஞ் சுற்றி இந்த வளைவு போலவே வட்டங்கள் இருப்பது உண்டு. அவைகளுக்கு மண்டலங்கள் என்று பேர். சூரியனைச் சுற்றியிருப்பதற்குச்

சூரியமண்டலம் என்றும், சந்திரனைச் சுற்றியிருப்பதற்குச் சந்திரமண்டலம் என்றும் பெயர்.

3. வானவில் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். அதில் ஏழு நிறங்களைக் காணலாம். பஞ்சவர்ணங்கள் இன்னின்ன வென்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இப்போது வானவில்லில் இருக்கும் ஏழு வர்ணங்கள் இன்னின்ன வென்றும் தெரிந்துகொள்ளுங்கள். அவை சிவப்பு நிறம், கிச்சிலிப்பழ நிறம், பொன் நிறம், இலை நிறம், வெண்மை கலந்த நீல நிறம், நீல நிறம், ஊதா நிறம் என்பன.

4. வானவில் எப்பொழுதும் சூரியன் இருக்கும் திசைக்கு எதிர்த் திசையிலேயே காணப்படும். அதாவது வானவில் காலையில் மேற்கிலும் மாலையில் கிழக்கிலும் தெரியும். வானவில் எப்படி உண்டாகிறது தெரியுமா? சொல்லுகிறேன் கேளுங்கள்.

5. வானவில் மழைத் துளிகளினால் உண்டாகிறது. ஆகாயம் சில வேளைகளில் நீர்த் துளிகளால் நிறைந்திருக்கும். சூரிய கிரணங்கள் அந் நீர்த் துளிகளின்மேல் படும்பொழுது வானவில் உண்டாகிறது. வானவில்லில் காணப்படும் நிறங்கள் சூரியனுடைய கதிர்களில் இருக்கும் நிறங்களே. இந்த ஏழு நிறங்களையும் சூரியனுடைய ஏழு குதிரைகள் என்று சொல்வது உண்டு. வானவில்லை இந்திர வில் என்றும் சொல்லுவார்கள். இந்திரன் தேவலோகத்துக்கு அரசன்.

23. உழவின் சிறப்பு

I

1. முன் ஒரு காலத்தில் ஓர் அரசன் மதுரைமா நகரத்தை ஆண்டு வந்தான். அவன் குடிகளையும் பிரபுக்களையும் ஒரே மாதிரியாக நடத்தி வந்தான். பிரபுக்கள் தன்னிடம் வந்தால் அவர்களிடம் அவன் எப்படி அன்புடன் பேசுவானோ, அப்படியே குடிகளிடத்திலும் பேசுவான். குடிகள் குற்றஞ் செய்தால் அவர்களுக்கு அவன் எந்தத் தண்டனை விதிப்பானோ அந்தத் தண்டனையையே பிரபுக்களுக்கும் விதிப்பான்.

2. அக்காலத்திலே அந்நகரத்தில் செல்வம் நிறைந்த சீமான் ஒருவன் வாழ்ந்திருந்தான்.

அவனுக்குக் குடியானவர்களென்றால் மிகவும் அலக்ஷியம். அவர்களோடு ஒன்றாக உட்காரவு மாட்டான். குடிகளெல்லாரும் தாழ்ந்தவர்கள் என்பது அவன் எண்ணம். அரசன் யாவரையும் சரிசமானமாக நடத்துவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

3. அரசனுக்கு அந்தப் பிரபுவின் குணம் தெரிய வந்தது. உடனே அரசன் அவனுக்குப் புத்தி புகட்ட எண்ணினான். அதற்காக ஒரு யோசனை பண்ணினான். அரசன் ஒருநாள் அந்தச் சீமானைத் தன் வீட்டில் விருந்துண்ண அழைத்தான். பிரபு விருந்துக்கு வந்தார். அரசன் பிரபுவை வரவேற்று உபசரித்தான்.

4. பின்பு பிரபு போஜன சாலைக்குச் சென்றார். அங்கே ஒரு பெரிய தலைவாழை இலை விரிக்கப்பட்டிருந்தது. அதில் பருப்பு, கூட்டு, வறல், பொரியல் அவியல், பச்சடி, துவையல் முதலியவைகள் ஒரு வரிசையில் இருந்தன; அப்பளம் வடை, உருண்டை, அதிரசம், தோசை முதலிய பலகார வகைகள் மற்றொரு வரிசையில் இருந்தன. நெய், பால், தேன், தித்திப்புத்தயிர், புளிப்பு மோர், பாயசம் முதலிய பானவகைகள் இலையைச் சுற்றி வைக்கப்பட்டிருந்தன. வடிகட்டிக் காய்ச்சி ஆறின தண்ணீர் ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் ஒரு பக்கம் வைக்கப்பட்டிருந்தது. இன்னொரு பக்கத்தில் முக்கனியும் படைக்கப்பட்டிருந்தன.

5. பிரபுவும் இலைக்கு எதிரே இருந்த ஓர் அலங்காரமான பீடத்தின் மேல் விருந்துண்ண அமர்ந்தார். சுற்றிச் சுற்றிப் பார்த்தார். அவர் கண்ணுக்குச் சாதம் மட்டும் அகப்பட வில்லை. அது இலையிலேயும் இல்லை. வெளியிலேயும் இல்லை. சிறிது நேரம் சும்மா விருந்தார். பக்கத்தில் எவரும் இல்லை. அதன் மேல் அவர் பல காரங்களில் சிறிது உண்டார். கறிகளிலும் சிலவற்றைச் சுவைத்துப் பார்த்தார். அவருக்குத் திருப்தி ஏற்பட வில்லை. பாயசத்தை இலையில் விட்டு உறிஞ்சினர். பழங்களிலும் கொஞ்சம் சாப்பிட்டார். எதிலும் திருப்தி உண்டாகவில்லை. மோரைத் தொன்னையில் வார்த்துக் கொண்டு மட மடவென்று நெட்டினர். பின்பு வெறுப்புடன் எழுந்து கையலம்பிக்கொண்டு அரசனிடம் வந்தார்.

6. அரசன் அவரைப் போஜனம் செய்தாய் விட்டதா வென்று விசாரித்தான். பிரபுவும், "ஆம், ஆய்விட்டது," என்று முக்வாட்டத்துடன் சொன்னர். இதைக் கண்ட அரசன், "வயிருர உண்ண வில்லையோ!" என்ருன். "அன்ன மில்லாமல் வயிருர உண்ண முடியுமா!" என்று பிரபு சொல்லினர். அரசன், "அப்படியா! அன்னம் அவ்வளவு முக்கியமா!" என்று சொல்லிப் பிரபுவுக்குத் தாம்பூலம் கொடுத்து அனுப்பிவிட்டார்.

24. உழவின் சிறப்பு

II

1. மன்னவன் மறுநாள் தன் நகரத்திலுள்ள பிரபுக்கள் யாவரையும் கொலு மண்டபத்துக்கு வரவழைத்தான். எல்லாரும் குறித்த காலம் தவருமல் வந்து கூடினார்கள். முன் நாள் விருந்துண்ட பிரபுவும் வந்து சேர்ந்தார்.

2. அரசன் சிங்காதனத்தை விட்டு எழுந்து உரத்த குரலுடன், 'பிரபுக்களே, இதோ பாருங்கள்; என் கையில் ஒரு பொற் சிமிழி இருக்கிறது. இது நவரத்தினங்களாலும் இழைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரத்தினங்களுக்கு ஒப்பானவை எங்கும் இல்லை. இப்படிப்பட்ட சிமிழிலே ஏதேனும் ஒரு பொருளை வைக்கவேண்டுமென்று விரும்புகிறேன். அது இந்த ஒன்பது மணிகளுக்கும் மேலானதாக இருக்க வேண்டும். அது இன்ன பொருளென்று நீங்கள் ஆராய்ந்து சொல்லுவீர்களாக. பொருத்தமான விடை தருபவருக்குப் பிரபு சிகாமணி என்னும் பட்டம் தருவேன். அவர் உங்களுக்குத் தலைவர் ஆவார்," என்று கூறி அமர்ந்தான்.

3. இதைக் கேட்டிருந்த பிரபுக்கள் எல்லோரும் அமர்ந்து ஆராயத் தொடங்கினார்கள். நெடு நேரம் வரையில் யாரும் வாய் திறக்கவில்லை. கடை

சியில் பிரபு ஒருவர் எழுந்தார். அவர் தொண்டுகிழவர். அவர் மன்னவனை வணங்கிச் சொல்லத் தொடங்கினர்.

4. "மகாராஜனே, எனக்கு இப்பொழுது எண்பதாவது வயது நடக்கிறது. நான் மூன்று தலைமுறை கண்டவன். உலகத்தில் மனிதர் கற்கின்ற கல்வியும் செய்கின்ற தொழில்களும் உணவின் பொருட்டே ஆகும். உணவு இல்லையானல் நாம் உயிர் வாழ மாட்டோம். உயிரினும் சிறந்த பொருள் வேறு ஒன்றும் இல்லை. உயிர் தங்கும் இடம் உடம்பு; உடம்பைக் காப்பாற்றுவது உணவு; உணவுக்குக் காரணமாயிருப்பது அரிசி. இந்த அரிசி ஜீவர்களைக் காப்பாற்றுவதனுல் இதனை ஜீவரத்தினம் என்று பெரியோர் சொல்லுவர். இந்த ஜீவரத்தினமே அந்த நவரத்தினச் சிமிழியில் நாம் வைக்க வேண்டிய அரும்பொருள் என்று எண்ணுகிறேன்," கூறி இருந்தார்.

5. அப்பெரியவர் பேசி முடித்த வுடனே பிரபுக்கள் எல்லாரும் "பேஷ்! பேஷ்!" என்றூர்கள்; கைகொட்டி ஆரவாரித்தார்கள். மன்னனும் முடி யசைத்தான்.

6. பின்பு வேந்தன் எழுந்து நின்று, "சீமான்களே, பெரியவர் சொல்லியதை நீங்கள்

யாவரும் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். நானும் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன். உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவராவர். எல்லாத் தொழிலுக்கும் அடிப்படை யானது பயிர்த்தொழில். உழவர் மேட்டை உழுதால்தான் அரசன் நாட்டை ஆள முடியும். ஆதலால் நாம் பயிர்த்தொழிலைப் போற்ற வேண்டும். உழவர்களை நம்மைக் காட்டிலும் அதிகமாக மதிக்கவேண்டும். பத்துவிதக் கறியும் பச்சடியு மிருந்தாலும் அன்ன மில்லாத விருந்து விருந்தாகுமா? ஆகையினாலே உழவர்களை ஒரு பொழுதும் இழிவாக எண்ணக் கூடாது. இவ் வளவு அருமையான விஷயத்தை அறிந்து சொன்ன இப்பெரியவருக்குப் பிரபு சிகாமணி என் னும் பட்டம் தருகிறேன். இவர் இன்று முதல் உங்களுக்கெல்லாம் தலைவராக இருப்பார். இந் நவரத்தினச் சிமிழி இந்த ஜீவரத்தினத்தோடு இச்சபா மண்டபத்தில் என்றும் விளங்குவதாக," என்று கூறினவுடன் சபை கலைந்தது.

7. குடியானவர்களைக் குறைவாக நினைத்த பிரபு, அரசன் தனக்குப் புத்தி புகட்டவே அந்தத் தந்திரம் செய்தான் என்று அறிந்துகொண்டான். அன்று முதல் அவன் குடியானவர்களை உயர் வாக மதித்து ஒழுங்காக நடந்து வந்தான். அரச னும் அதை அறிந்து மகிழ்ந்தான்.

25. உழவு

I. ஆத்திசூடி

1. அஃகம் சுருக்கேல்
2. பருவத்தே பயிர்செய்
3. மண்பறித் துண்ணேல்
4. செய்வன திருந்தச்செய்
5. நெற்பயிர் விளை
6. பூமி திருத்திஉண்

II. கொன்றை வேந்தன்

1. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு
2. சீரைத் தேடின் ஏரைத் தேடு
3. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
4. நீரகம் பொருந்திய ஊரகத் திரு
5. பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்
6. போனக மென்பது தானுழந் துண்டல்
7. மாரியல்லது காரியமில்லை
8. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
9. மேழிச் செல்வம் கோழை படாது

26. தென்னையின் மேல் புல்லுக் கேறினவன்

1. ஒரு திருடன் அயலான் ஒருவன் தோட்டத்துக்குப் போனான். அங்கே ஒரு தென்னை மரத்திலே தேங்காய் குலைகுலையாகக் காய்த்துத் தொங்கிற்று. அவைகள் பச்சைப் பசேலென இருப்பதைத் திருடன் கண்டான். அவன் தேங்காய்களைத் திருடிக் கொண்டு போக விரும்பினான். அதனால் அவன் சந்தடி செய்யா மல் மடமட வென்று தென்னை மரத்தின் மேல் ஏறினான்.

2. அப்போது மரத்துக்காரன் அந்த அர வம் கேட்டு விழித்துக்கொண்டான். உடனே அவன் அதட்டிக் கொண்டு மரத்தண்டை ஓடிவந் தான். அதனை அறிந்த கள்ளன் மரத்திலிருந்து மெதுவாக இறங்கி வந்தான். மரத்துக்காரன் திருடனைப் பார்த்து, " அடா, ஏன் மரத்தின்மேல் ஏறினாய்?' என்று கோபத்தோடு கேட்டான். அதற்குத் திருடன், " அண்ணே, நான் கன்றுக் குட்டிக்குப் புல் பிடுங்க ஏறினேன்," என்று பய மில்லாமல் சொன்னான்.

3. அதைக் கேட்ட மரத்துக்காரன், " பேஷ்! நன்றாய் இருக்கிறது! தென்னை மரத்திலே புல் இருக்குமா? இதை யாராவது கேட்டால் சிரிப்பார் கள்," என்றான். அதற்குக் கள்ளன், " இது தெரியாதா! இல்லாததால்தான் இறங்கி வரு கிறேன்,' என்று ஏளனம் செய்துகொண்டே போய்விட்டான்.



27. அரசாட்சி

1. ஐந்தாம் ஜ்யார்ஜ் என்பவர் நமது சக்கரவர்த்தியாக விளங்குகிறார் என்று நீங்கள் படித்திருக்கிறீர்கள். அவர் இங்கிலாந்து தேசத்தில் லண்டன் மாநகரத்தில் இருந்தாலும், அவர் ஆட்சி இங்கே நடைப் பெற்று வருகின்றது. எவ்வாறு அது நடைபெற்று வருகின்ற தென்பதை இங்கே சொல்லுகிறேன் கேளுங்கள்.

2. நமது சக்கரவர்த்திக்குப் பதிலாக இந்தியாவில் இருப்பவருக்கு இராஜப் பிரதிநிதி என்று பெயர். அவர் டில்லி மாநகரத்தில் வசிக்கிறார். இந்தியா தேசம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு கவர்னர் இருக்கிறார். கவர்னர் என்றால் ஆளுகிறவர் என்று பொருள். இவர்கள் எல்லாரும் இராஜப் பிரதிநிதிக்குக் கீழ்ப்பட்டவர்கள்.

3. ஒவ்வொரு மாகாணத்திலும் பல ஜில்லாக்கள் உண்டு. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு அதிகாரி இருக்கிறார். அவர் முக்கிய வேலை நிலத் தீர்வை வாங்குவதாகையால் அவருக்குக் கலெக்டர் என்று பெயர். கலெக்டர் கவர்னர் அதிகாரத்துக்கு உட்பட்டவர். அவர் நில சம்பந்தமான வழக்குக்களையும் சண்டை சச்சரவுகளையும் விசாரணை செய்து தீர்ப்புக் கொடுப்பார்.

4. ஒவ்வொரு ஜில்லாவும் பல தாலுக்காக்களை உடையது. தாலுக்கா அதிகாரி தாசீல்தார் என்று சொல்லப்படுவார். இவர் கலெக்டருக்கு அடங்கியவர். இவருக்குத் தாலுக்காவில் நிலத் தீர்வையை வசூலிப்பதுதான் முதன்மையான வேலை. தாலுக்காவின் பொக்கிஷம் தாசீல்தார் வசத்தில் இருக்கிறது. நில அபிவிர்த்தியின்

பொருட்டுக் குடிகளுக்குக் கடன் கொடுப்பதற்கும் திருப்பி வாங்குவதற்கும் தாசில்தாரருக்கு அதிகாரம் உண்டு.

5. தாலுக்காவில் பல கிராமங்கள் உண்டு. கிராமத்துக்கு ஒரு அதிகாரி உண்டு. அவருக்குக் கிராமாதிகாரி என்று பெயர். இவர் நிலத்தீர்வையை வசூல் செய்து தாலுக்கா பொக்கிஷசாலைக்கு அனுப்புவார்; சிறு வழக்குக்களைத் தீர்ப்பார். பொது நிலங்களையும் அவற்றிலுள்ள மரங்கள் முதலானவைகளையும் பாதுகாப்பார். கிராமத்துக்கு வேண்டிய நீர்ப்பாய்ச்சல், சுகாதாரம் முதலியவைகளை இவரே கவனிப்பார்.

6. இவருக்குக் கீழ் ஒரு கணக்கப்பிள்ளை இருக்கிறார். அவர் நிலவரிக் கணக்குக்களை எழுதுவார். இன்னும் கிராமத்தில் வெட்டித் தலையாரிகள் உண்டு. அவர்கள் கிராமாதிகாரி ஏவும் வேலைகளைச் செய்வார்கள்.

வினா: 1. ஒவ்வொரு தாலுக்காவிலும் கஜானா ஏன் இருக்கிறது?

2. கலெக்டருடைய அதிகாரங்கள் எவை?

3. குடித்தனக்காரர்கட்கு இராஜாங்கத்தார் என்னென்ன உதவிகளைச் செய்து வருகிறார்கள்?

4. நீ வெளியூரில் வேலை செய்துகொண்டிருந்தால் சொந்தவூரிலுள்ள நிலத்துக்குத் தீர்வையை எவ்வாறு செலுத்துவாய்?

28. பாரத தேவி

பாரத தேவீ பாரத தேவீ
பாரத தேவீ பாதம் பணிவோம்.

1. ஓங்கிய இமய மாமலை யுடையாய்
ஓடும் கங்கை மாநதி யுடையாய்.

2. வானவர் போற்றும் மலய மலையாய்
வண்தமிழ் வரம்பாம் வேங்கட மலையாய்.

3. பொன்னி வைகை கன்னியும் பெற்றாய்
புகழும் பற்பல கலைகளும் பெற்றாய்.

4. காசி காஞ்சி மாநகர் கொண்டாய்
கழுக்குன் றாகும் தீர்த்தமுங் கொண்டாய்

5. காளி தாசன் கவியையுங் கண்டாய்
கம்பன் மொழிகற் கண்டெனக் கண்டாய்.

6. புத்த தேவனைப் பூமிக் களித்தாய்
பொதுவாம் வள்ளுவன் நீதியிற் களித்தாய்.

7. ஒற்றுமை யாக வாழ்வோ மாக
உலகம் புகழ வாழ்வோ மாக.

8. அன்புடன் எமது துயரம் தீர்க்க
அருளுடன் எம்மை நாளும் பார்க்க.

பாரத தேவீ பாரத தேவீ
பாரத தேவீ பாதம் பணிவோம்.

வினா : 1. இமயமலை எங்கே இருக்கிறது ? அதன் பெருமை யாது ?

2. மலய மலைக்கு மற்றொரு பெயர் என்ன ?

3. தீர்த்தம் என்பதற்குப் பொருள் என்ன ?

4. புத்ததேவர் யார் ?

5. வள்ளுவர் செய்த நூல் எது ? தேவி என்பதற்கு ஆண்பால் என்ன ?

29. உடற் பழக்கம்

1. பிள்ளைகளே நாம் உண்ட உணவு செரிப்பதற்கு வேலை செய்ய வேண்டும்; ஓடியாடி உலாவ வேண்டும். தொட்டிலிலே கிடக்கும் குழந்தை கைகால்களை அசைத்துக் கொண்டிருப்பதை நீங்கள் பார்க்க வில்லையா? குழந்தை அப்படிச் செய்வதனுல் தான் அதன் உடம்பு வளர்ந்து உரம் பெறுகிறது. இதனுல் ஒவ்வொருவரும் உடம்பால் உழைக்க வேண்டு மென்பது தெரிகிறதல்லவா?

2. சில பிள்ளைகள் விளையாடாமல் உட்கார்ந்த இடத்திலேயே பிள்ளையார் போல இருக்கிருர்கள். அவர்களைப் பெற்ருேர்கள் சிலரும் பாராட்டிப் பேசுகிருர்கள். அப்படிப்பட்ட பிள்ளைகள் உடல் உரம் இல்லாமல் மெலிந்து போகிருர்கள். அன்றியும் அவர்கள் கோழைகளாகித் தீர மற்றுப் போய்விடுகிருர்கள். அவர்களால் எந்தக் காரியமும் முற்ற முடியச் செய்ய முடியாது. கல்வி கற்றுவிட்டால் மாத்திரம் போதாது. உடம்பில் வலிவும் இருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு நாளும் சிறிது நேரமேனும் உடற் பழக்கம் செய்ய வேண்டும். உடற் பழக்கம் செய்வதால் உடலுக்குள் இருக்கும் அழுக்குகள் வியர்வை மூலமாய் வெளிவந்து விடும்; இரத்தம்

சுத்தியாகும்; உடம்பில் உள்ள எல்லா உறுப்புக்களும் உரம் பெறும். அதனால் நோய் உடம்பில் அணுகாது. தேகப்பயிற்சியைக் காற்றோட்டமும் சூரிய வெளிச்சமு முள்ள இடத்திற் செய்ய வேண்டும். உடற்பயிற்சி செய்யும்போது வாயினால் மூச்சு விடவே கூடாது.

4. பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் உடற் பயிற்சி என்றால் வேண்டா வெறுப்பாய் இருக்கிறார்கள். அதனாலாகிய நன்மையை அவர்கள் அறிந்தால் அவ்வாறு இருக்க மாட்டார்கள். தேகப்பயிற்சியின் நன்மையைக் கருதியே பல வகை விளையாட்டுக்களும் ஏற்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் வருஷந்தோறும் பந்தய விளையாட்டுக்கள் வைத்துப் பிள்ளைகளுக்கு உடற் பழக்கத்தில் மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறார்கள்.

5. கால் நடையும் ஒரு நல்ல பழக்கமே. விசையாய் நடந்து செல்வதால் கைகால்கள் அசையும், வியர்வை விடும், நல்ல காற்று உள்ளே செல்லும். இவைகளால் உடம்புக்கு மிக நன்மை விளையும். ஓடுதலும் நீந்துதலும் நல்ல உடற் பழக்கங்கள். ஒவ்வொருவரும் நீந்தப் பழகவேண்டும். நம்முடைய பிள்ளைகள் பலவித விளையாட்டுக்களையும் செய்ய வேண்டும். விளையாடாத பிள்ளைகளைப் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் வற்புறுத்தி விளையாடச் செய்ய வேண்டும்.

6. பிள்ளைகள் காலையில் எழுந்து சிறிது தூரம் நடந்து தமது உடைகளைத் துவைத்துக் கொண்டு நீராடித் திரும்பி வருவார்களானால் அதுவே அவர்களுக்கு நல்ல தேகப் பயிற்சியாக அமையும். புலவர் ஒருவர் தேகப் பயிற்சிக்காகத் தமது தோட்டத்தில் ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்தார். ஆங்கிலேய மேதாவி ஒருவர் உடற்பயிற்சிக்காக நாள்தோறும் விறகு வெட்டுவது வழக்கமாம். இவைகளால் அவர்கள் இரண்டு விதமான நன்மைகளை அடைந்தார்கள் அல்லவா!

7. ஒழிவு நேரங்களில் நூல் நூற்பதும், துணி நெய்வதும் நல்ல தேகப் பயிற்சிகளாகும். அன்றியும் அவைகளால் பிள்ளைகளுக்கு உடைகளும் தாமாகவே ஏற்பட்டுவிடும்.

8. பந்தாட்டம் முதலிய விளையாடல்களில் பிள்ளைகளுக்கு உடல் உழைப்பு ஏற்படுவதோடு அவர்களுக்குள்ளே ஒற்றுமை, துணிவு, மானம், ஊக்கம் முதலிய குணங்களும் உண்டாகின்றன. கால்பந்து விளையாட்டும் நமது நாட்டின் பழைய விளையாட்டே.

வினா: 1. ஏற்றம் இறைப்பது போன்ற உடற் பழக்கத்தால் உண்டாகும் இரண்டு விதமான நன்மைகள் எவை?

2. மானம் என்பது என்ன?

3. நீ என்ன விளையாட்டை விரும்புகிறாய்? ஏன்?

30. திருவள்ளுவர் நெசவுத்தொழில் செய்தல்

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டிலே வள்ளுவர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் படிக்காத புத்தகம் இல்லை; அறியாத பொருள் இல்லை. அவரை உலகமெல்லாம் கொண்டாடிற்று. அவர் சென்னைக்கு அருகிலேயுள்ள திருமயிலையில் வாழ்ந்து வந்தார். அவர் வாசுகி என்னும் பெண்ணரசியை மணம் செய்துகொண்டார். அவ்வம்மை கணவன் சொற்படி நடந்து வந்த உத்தமி. அவ்விருவரும் குடும்பத்தை மிகவும் அழகாக நடத்தி வந்தார்கள்.

2. திருவள்ளுவர் இவ்வளவு பெரியவராக இருந்தும், அவர் மெய்வருத்த மின்றி உணவு கொள்ள விரும்பவில்லை. அவருக்கு வேண்டியவற்றை உதவுவதற்குச் செல்வர்கள் பலர் இருந்தார்கள். அவரைத் தெய்வம்போல் போற்றுவதற்கு மாணாக்கர் பலர் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும் அவர் தாம் உடம்பால் உழைத்து உண்பதுதான் உணவாகுமென்று எண்ணினார். அதனால் அவர் பிறரிடத்தில் பொருள் யாதும் பெற விரும்பவில்லை. தமது வாழ்க்கையை நடத்துவதற்கு அவர் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்ய விரும்பினார்.

3. அவர் உலகத்தில் நடைபெறும் எல்லாத் தொழில்களையும் சீர்தூக்கிப் பார்த்தார். தொழில்கள் எல்லாவற்றிலும் பயிர்த் தொழிலும் நெசவுத் தொழிலுமே சிறந்தவை என்று அவர் கண்டார். இவ்விரண்டிலும் பயிர் தொழிலில் சிறிது தீமை உண்டென்று கொண்டார். ஆகவே அவர் நெசவுத் தொழிலேயே தமக்கு உரிய தொழிலாக மேற்கொண்டார்.

4. ஒவ்வொரு நாளும் வள்ளுவனுர் நெசவுத் தொழில் செய்து அதன் வருவாயைக் கொண்டு ஏழைகள் பசியைத் தவிர்த்தும் அதிதி பூசை செய்தும் வாழ்ந்து வந்தார். அவர் எளிய இனிய வாழ்க்கையை எல்லாரும் பாராட்டினுர்கள். முடி மன்னரும் அவரடி வணங்கினர். கவிராஜரும் அவரைத் தவராஜரென வாழ்த்தினர்.

5. இவருக்கு நாயனுர் என்றும் தேவர் என்றும் பெயர்கள் வழங்கும். நாயனுர் அருளிச் செய்த நூல் திருக்குறள் என்பது. திருக்குறளில் சொல்லாத பொருளில்லே. அதனைப் பெரியோர் வேதம் எனப் போற்றுகின்றனர்.

போனக மென்பது தானுழந் துண்டல்

வினு: 1. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை ?

2. பயிர்த்தொழிலில் உள்ள தீமை என்ன ?

3. அதிதி பூசை என்ருல் என்ன ?

31. பெரு நள்ளி

1. முன் ஒரு காலத்திலே தமிழ் நாட்டிலே அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய நாடு மலைகளால் சூழப்பட்டிருந்தது; அம்மலை நாட்டுக்குத் தோட்டி என்று பெயர். அவ்வரசன்

பெயர் பெரு நள்ளி. அவன் சிறந்த குணங்களை உடையவன்; இளகும் நெஞ்சு உடையவன். அம்மன்னன் ஒரு பெரிய வீரன். அவன் எல்லா ரிடத்தும் அன்பு பாராட்டி அவரவர்க்கு வேண் டும் பொருள்களைக் கொடுப்பான். அவ்வேந்தன் புகழைப் புலவர்கள் பாடிப் பாராட்டினர்கள்.

2. அக்காலத்திலே வன்பரணர் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய ஊரை விட்டு வேற்றூருக்குச் சென்றார். அவர் எடுத்துக்கொண்டு போன பொருளெல்லாம் அங்கே செலவாய் விட்டன. அவர் கையிலே ஒரு காசும் இல்லை. அப்புலவருக்குக் கடன் கொடுப் பதற்கும் அங்கே யாரும் இல்லை. அவர் கூட இருந்த மனைவியும் மக்களும் உறவினரும் பசி யால் வருந்தினர். அவர்கள் கட்டிக்கொண் டிருந்த துணிகள் அழுக்கேறி யிருந்தன. வன்பர ணரும் கந்தைத் துணியைச் சுற்றிக் கொண்டிருந் தார்.

3. பரணரும் தம்முடைய சுற்றத்தாரும் நடக்க முடியாமல், காலோய்ந்து ஒரு காட்டை அடைந்தார்கள். அங்கே அவர்கள் ஒரு பலா மரத்தின் அடியிற்போய் இளைப்பாறிக் கொண் டிருந்தனர். இளைப்பாறினல் பசியாறிவிடுமா? அப்பொழுது நள்ளி மான் வேட்டை ஆடிவிட்டு அங்கே வந்தான். அம்மன்னன் வேட்டை உடுப் புக்களைப் போட்டுக்கொண் டிருந்தான். அவன் தன் கையில் ஒரு பெரிய வில்லை ஏந்தியிருந் தான்; அவனுடைய முதுகிலே அம்பறாத் தூணி இருந்தது.

4. புலவர் நள்ளியைப் பார்த்தார். பார்த்ததும் அவர் அவனை வணங்கி எழுந்தார். அவன் இன்னானென்று அவருக்குத் தெரியாது. உடனே நள்ளி புலவரைக் கைகவித்து, "இருங்கள்" என்று அன்போடு சொல்லிவிட்டு, அவர்கள் எல்லாரும் பசியால் வருந்துவதைப் பார்த்து மனம் உருகினான்.

5. பின்பு அவ்வள்ளல் சுற்றிப்பார்த்தான். வேலையாட்கள் அப்பொழுது ஒருவரும் அங்கு இல்லை. எல்லாரும் வேட்டையிலே ஒவ்வொரு வழியாய்ப் பிரிந்து வழி தப்பிப் போய்விட்டார்கள். அவர்கள் வந்து சேரும் வரையில் புலவரும் அவருடைய சுற்றத்தாரும் காத்திருக்கக்கூடாது என்று அவன் எண்ணினான். அதனால் நள்ளி தனது களைப்பையும் பாராமல் தானே தன் அருமைக் கையால் சுருக்காகத் தீயைக் கடைந்தான்.

6. பிறகு அவன் வேட்டையிலே கொன்ற மானினுடைய இறைச்சியைப் பதமாகச் சுட்டு வைத்து, புலவரிடம் வந்தான். அச்செம்மல், புலவரைப் பார்த்து, "தாங்கள் சுற்றத்தாருடன் இதனைத் தின்று பசி தீருங்கள்," என்று இனிமையாகப் பேசினான். அவர்களும் அந்த மானிறைச்சியை அமிழ்தத்தைப் போலத் தின்றார்கள்; அம்மலைச் சாரலிலே உச்சியிலிருந்து வீழும் பளிங்கைப்போல விளங்கும் அருவி நீரை அள்ளி யள்ளிக் குடித்தார்கள். அவர்களுடைய பசியும் தாகமும் தீர்ந்தன. அங்கேயே அவர்கள் சிறிது நேரம் இளைப்பாறிக் கிடந்தார்கள்.

7. பின்பு புலவர் நள்ளியிடம் விடை பெற்

றுக்கொண்டு போக எழுந்தார். உடனே அந்தப் பெருமான் அவரிடம் வந்து, "ஐயா, நான் நாட்டை விட்டு இப்போது காட்டிலே இருக்கிறேன்; தங்களுக்குக் கொடுப்பதற்கு என்னிடத்திலே இங்கே நல்ல நகைகள் கூட இல்லை. என்ன செய்வேன்! இவைகளை அன்புடனே பெற்றுக்கொள்ளுங்கள்," என்று மென்மையாகச் சொல்லித் தன் மார்பிலே அணிந்திருந்த முத்து மாலையையும் கைக்கடகத்தையும் கழற்றிக் கொடுத்தான்.

8. புலவர் அடங்கா மகிழ்சியுடன் அவற்றை வாங்கிக்கொண்டு மன்னவனைப் பார்த்து, "வள்ளலே, தங்கள் நாடு எது? தங்களுடைய திருநாமம் என்ன? அன்பு கூர்ந்து சொல்ல வேண்டும்" என்று கேட்டார். அதற்கு அவன், "ஐயா, அதைப் பற்றிய கவலை தங்களுக்கு வேண்டாம்; பத்திரமாய் ஊருக்குப் போய்ச் சேருங்கள்," என்று புன்சிரிப்புடன் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

9. புலவர் தமக்கு அவ்வளவு பெரிய நன்றி செய்தவன் இன்னு னென்று அறியக் கவலை கொண்டார். அதனால் வழியிலே பார்த்தவர்களையெல்லாம் அவன் யார் என்று கேட்டார். அவர்கள் எல்லாரும் அவன் கண்டீரக்கோ பெரு நள்ளி என்னும் மலை நாட்டு மன்னன் என்றார்கள். அப்போது புலவர் அவன் அருமைக் குணத்தைப் பாராட்டி நடந்ததை அப்படியே ஒரு பாட்டில் பாடி வைத்தார்.

ஒன்றையும் எதிர்பாராது கொடுப்பதே கொடை.

32. வழி நடை

1. செல்வச் சிறுவர்களே, நீங்கள் வழியிலே நடக்கும்போது கவனத்தோடு நடக்கவேண்டும். இல்லாவிட்டால் வண்டிகள் ஓடுவதாலும் ஜன நெருக்கத்தாலும் பல துன்பங்கள் நேரிடும். எத்தனையோ முறைகளில் ஜனங்கள் வண்டிகளில் அகப்பட்டுக் கொண்டு உயிரையும் இழக்கிறார்கள். சிறிது கவனித்திருந்தால் இப்படிப்பட்ட நிலையை அவர்கள் அடைய வேண்டியதில்லை; உயிரையும் இழக்க வேண்டியதில்லை.

2. நீங்கள் எதையாவது நினைத்துக் கொண்டே நடக்கக் கூடாது. அப்படி நடந்தால் எதிரே வரும் வண்டியைப் பார்க்க முடியாது. எப்பொழுதும் வண்டி வரும் பக்கத்துக்கு எதிரிலேயே போக வேண்டும். அப்போதுதான் எதிரிலே வரும் வண்டிக்கு ஏற்றபடி பார்த்து நடக்கலாம்.

3. நாம் எப்பொழுதும் ஓர் ஓரமாகவே நடந்து போகவேண்டும். ஆனால் தெரு ஓரத்தில் கண்ணாடித் துண்டுகள், முட்கள், எலும்புகள் முதலியன கிடக்கும். அவைகளைப் பார்த்துச் செல்ல வேண்டும். சில வேளைகளில் சுருட்டு, பீடி முதலானவைகளின் துண்டுகள் நெருப்புடனே கிடக்கும். அவைகளை நீங்கள் மிதித்து விடக் கூடும். அதனால் கீழே பார்த்து நடத்தல் நல்லது.

4. காலிலே செருப்புப் போட்டுக்கொள்ளுதல் மிகவும் நல்லது. கையிலே குடை வைத்துக்கொண்டிருந்தால், வெய்யிலைக் காத்துக்கொள்ளலாம் ; மழைக்கும் அஞ்ச வேண்டிய தில்லை.

5. ஜன நெருக்கத்தில் கொஞ்சம் பொறுத்துப் போகவேண்டும். நாம் சீக்கிரம் போக வேண்டும் என்றெண்ணி நடுவிலே நுழைந்து போகலாகாது. முன்னும் பின்னும் வண்டிகள் வருவதைப் பார்த்துக்கொண்டுதான் போகவேண்டும்.

6. பலர் ஒன்ருகக் கூடிக்கொண்டு போகும்போது, வண்டி வந்தால் இப்படி அப்படிச் சிதறி ஓடும்படி நேரும். அப்போது துன்பம் உண்டாகக்கூடும். ஆதலால் கைகோத்துக் கொண்டும், தோளோடு தோள் பிணைத்துக் கொண்டும் நடக்கக் கூடாது. சிரித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும் நடத்தல் ஆகாது. நடக்கும்போது பராக்குப் பார்த்துக்கொண்டு போகக்கூடாது. இவைகளை எல்லாம் கவனித்து நடந்தால் நமக்கு ஒரு தீமையும் உண்டாகாது.

33. சுட்ட பழமா சுடாத பழமா

1. நெடுங்காலத்துக்கு முன் அவ்வையார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெண். அந்த அம்மை தமிழை நன்றாகக் கற்றுத் தேர்ந்தவர். அவர் படிக்காத புத்தகம் இல்லை. அவர் எத்தனையோ பாட்டுக்கள் பாடி இருக்கிறார். அவ

ருக்கு ஒப்பானவர் யாரும் இல்லை. அவரை எல்லாரும் போற்றுவார்கள். அரசர்களும் அவரை நன்கு மதிப்பார்கள். அவ்வையார்தான் 'ஆத்தி சூடி, கொன்றைவேந்தன்' முதலிய புத்தகங்களை எழுதினவர்.

2. அவர் ஒரு காலத்திலே ஒரு காட்டு வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கே ஓரிடத்திலே நாவல் மரங்கள் இருந்தன. அப்பொழுது அம் மரங்களில் எல்லாம் பழங்கள் பழுத்திருந்தன. கருமையான நாவற் பழங்களைக் கண்ட அவ்வை யாருக்கு வாய் ஊறிற்று. அதனால் சில பழங்களைப் பறித்துத் தின்னவேண்டு மென்று அவர் விரும்பினார். அவர் கிழவியாய் இருந்ததால் மரம் ஏற அவருக்கு முடியாது.

3. அப்பொழுது ஒரு மரத்தின் உச்சிக்கிளையில் ஒரு சிறுவன் இருந்தான். அவ்வையார் அவனைப் பார்த்து, "தம்பி, எனக்குச் சில பழங்களைப் பறித்துப்போடு," என்று கேட்டார். சிறுவன் உடனே அவ்வையாரைப் பார்த்து, "பாட்டி, உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா ?" என்று கேட்டான்.

4. அவ்வையாருக்குச் சுட்ட பழம் இன்னது என்றும், சுடாத பழம் இன்னது என்றும் தெரியவில்லை. உடனே அவர் சிறுவனைப் பார்த்து, "சுடாத பழம் வேண்டும்," என்றார். அச்சிறுவன் சில செம்பழங்களைப் பறித்து அவ்வையார் முன் எறிந்தான்.

5. அவ்வையார், 'ஓகோ! இதுதான் சுடாத பழமோ!' என்று தனக்குள் எண்ணிக்

கொண்டு அப்பையலைப் பார்த்து, "தம்பி, எனக்கு இப்போது சுட்ட பழம் வேண்டும்," என்றார்.

6. பையல் சில அளிந்த பழங்களைப் பறித்து எறிந்தான். அப்பழங்கள் கீழே விழுந்ததும் அங்கே இருந்த மணல் அவைகளில் ஒட்டிக் கொண்டது. அவ்வையார் பழங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டார்.

7. பின்பு அவர் ஒரு பழத்தில் ஒட்டியிருந்த மணலை வாயால் ஊதினார். அதைக்கண்ட பையன், "பாட்டி, பழம் மிகவும் சுடுகிறதோ? பார்த்து ஊது; கை சுடப் போகிறது!" என்றான்.

8. அவ்வையாருக்கு அப்பொழுதுதான் பையன் குறும்பு வெளிப்பட்டது. 'அடடா! சுடுகின்ற பொருளை ஊதுவது போலப் பழத்தை ஊதியதனால் தான் பையன் 'சுட்ட பழம்' என்றான்,' என்பதைத் தெரிந்துகொண்டார்.

9. அவ்வையார், 'இந்தச் சிறிய விஷயம் நமக்குத் தோன்றாமல் போய்விட்டதே, மாடு மேய்க்கும் சிறுவன் அல்லவோ நம்மை ஏளனம் செய்துவிட்டான்!' என்று சிறிது வருந்திச் செல்லத் தொடங்கினார்.

10. அப்போது பையன் அவ்வையார் எதிரே தோன்றி, "அவ்வையே, நான் முருகக் கடவுள். உன்னிடம் விளையாட வந்தேன்; வருந்த வேண்டாம்," என்று சொல்லி மறைந்தான்.

11. அவ்வையார் முருகன் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்தார்.

34. தமிழ் மொழி

1. ஆதியில் உலகம் முழுதும் உலவிய
அமிழ்தெனுந் தமிழ் மொழியே
மாதொரு பாகன் மகிழ்ந்தெமக் கீந்த
மதுரத் தமிழ் மொழியே

2. அன்று முதலா இன்று வரையில்
அழியாத் தமிழ் மொழியே
என்றும் இளமை குன்ரு தழகுடன்
இலங்குந் தமிழ் மொழியே

3. காதுக் கினிய ஓசை ஒழுகும்
கன்னித் தமிழ் மொழியே
ஓதற் கினிய மொழிக ளமைந்தே
ஓங்குந் தமிழ் மொழியே

4. தாயுந் தந்தையுங் கொஞ்சி என்னைத்
தழுவிய தமிழ் மொழியே
ஆயும் புலவர் கூடி நாடி
அறிந்த தமிழ் மொழியே

5. தெலுங்கு கன்னடந் துளுமலை யாளந்
தோன்றுந் தமிழ் மொழியே
இலங்குங் கோயில் எங்குந் தங்கும்
இசைமிகு தமிழ் மொழியே

6. என்தன் செந்தமிழ் என்தன் செந்தமிழ்
என்று மகிழ் வேனே
என்தாய் மொழியென என்தாய் மொழியென
எங்கும் புகழ் வேனே.

35. ஆத்திசூடி கொன்றைவேந்தன்

(ஒத்த பகுதிகள்)

1. தெய்வ மிகழேல்

ஆலயந் தொழுவது சாலவு நன்று.
வையந் தோறும் தெய்வந் தொழு.

2. எண்ணெழுத் திகழேல்

எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.

3. ஔவியம் பேசேல்

ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.

4. ஏயம்பட வுரை

கீழோ ராயினுந் தாழ வுரை.

5. நப்போல் வளை

குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை.
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.

6. வல்லமை பேசேல்

சூரம் பாயினும் வீரியம் பேசேல்.

7. இளமை யிற்கல்

கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.

8. கௌவை அகற்று

கௌவைச் சொல்லின் எவ்வருக்கும் பகை.

9. சான்றோ னெனத்திரி

சான்றோன் என்கை ஈன்றோர்க் கழகு.

10. சூது விரும்பேல்
வாதுமுற் கூறேல்

சூதும் வாதும் வேதனை செய்யும்.

11. சோம்பித் திரியேல்

சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.

12. தந்தைதாய்ப் பேண்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
தந்தைசொன் மிக்க மந்திர மில்லை.

12. பொருடனைப் போற்றிவாழ்

திரைகட லோடியுந் திரவியந் தேடு.
தேடா தழிக்கின் பாடாய் முடியும்.
வளவ னாயினும் அளவறிந் தழித்துண்.

14. ஆறுவது சினம்

தீராக் கோபம் போராய் முடியும்.

15. இணக்கமறிந் திணங்கு

நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.

16. தூக்கி வினைசெய்

நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.

17. காப்பது விரதம்

நோரா நோன்பு சீராகாது.

18. சுளிக்கச் சொல்லேல்

தைபவ ரெனினும் நொய்ய உரையேல்.

19. மீதூண் விரும்பேல்

பாலோ டாயினுங் கால மறிந்துண்.

20. தையல்சொற் கேளேல்

பேதமை என்பது மாதர்க் கணிகலம்.

31. தீவினை அகற்று

பொல்லாங் கென்பவை எல்லாந் தவிர்.

22. ஐயமிட்டுண்

மருந்தே யாயினும் விருந்தோ டுண்.

23. பெரியாரைத் துணைக்கொள்

மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.

24. இலவம்பஞ்சிற் றுயில்

மெத்தெனப் படுத்தல் நித்திரைக் கழகு.

25. மேன்மக்கள் சொற்கேள்

மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.

26. ஏற்ப திகழ்ச்சி

உரவோ ரென்கை இரவா திருத்தல்.

27. ஊக்கமது கைவிடேல்

ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு.

28. ஊருடன் கூடிவாழ்

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

29. சக்கர நெறிநில்

வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.

30. ஓதுவ தொழியேல்

ஓதாதார்க் கில்லை உணர்வொடும் ஒழுக்கம்.

விடுகவி

குகுகுகுகுகுதகுகுகுச் செட்டிமகள்.

அஅஅஅஅஅஅஅஅஅக் காசைப்பட்டாள்.

36. கொன்றை வேந்தன்

1. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
2. ஏவா மக்கள் மூவா மருந்து.
3. கிட்டா தாயின் வெட்டென மற.
4. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
5. சேமம் புகினும் சாமத் துறங்கு.
6. தையும் மாசியும் வையகத் துறங்கு.
7. தோழ னோடும் ஏழைமை பேசேல்.
8. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.
9. நோன் பென்பது கொன்றுதின் னாமை.
10. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.
11. பையச் சென்றால் வையந் தாங்கும்.
12. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.
13. மோன மென்பது ஞான வரம்பு.
14. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
15. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.

விடுகவி.

1. ஆட்டுக்குக் காலில்லை ஆனைக்குக் கொம்பில்லை
பாட்டுக்குள் ஆராய்ந்து பார்.
2. பூனைக்கு ஆறுகால் புள்ளினத்துக் கெட்டுக்கால்
ஆனைக்குக்கால் பதினேழானதே.

குறிப்புரை

காண்க : இப்புத்தகத்தின்கண் சில பாடங்களின்கீழ் வினுக்கள் தரப்பட்டுள்ளன. அவைகட்குத் தக்க விடைகளை மாணவர் வாயினின்றும் வருவிக்க வேண்டும். ஏனைய பாடங்களிலும் அவ்வாறே கேள்விகளைக் கேட்டு மாணக்கர் அறிவைப் பெருக்க வேண்டும்.

1. கொழுகொம்பு-கொடி படர்வதற்கு ஆதாரமாகிய கொம்பு. அலர்தல்-மலர்தல்- அல்லிக்கேணி-சென்னைத் திருவல்லிக்கேணி என்னும் இடத்தின் பெயரை உதாரணமாகக் காட்டுக. செம்மை-சிவப்பு.

2. விளங்கு-துலங்கு, திகழ். திருமகள் தாமரை மலரையடைய செல்வங்கொணர்ந்தாள் என்பதும், அவ்வாறே கலைமகள் கலைகளைக் கற்றாள் என்பதும் தற்குறிப்பு; தற்குறிப்பாவது ஒரு பொருளின் தன்மையைப் புலவன் தனது குறிப்பை ஏற்றி வேறாகச் சொல்வது. பொன்னாற் செய்து காண்பதாவது பொன்னால் தாமரை மலர்போலச் செய்து அணிந்து கொள்வது. கவியிற் கோப்பதாவது கவிகளில் புலவர்கள் தாமரை மலரைச் சிறப்பித்துப் பாடுவது. திருவடி-கடவுள் திருவடி. பகர்-புகழப்பட்ட. தெரிந்திருந்தால்-கடவுட் பாதங்களை அறிந்திருந்தால்.

4. மாரி-காளி. நாகப்பிரதிஷ்டை—நல்ல பாம்பைப்போல் கல்லில் அடித்து நாட்டுதல். பசுமை-பச்சைநிறம்.

5. அவன்...ஆடுவேனே—கடவுளின் கருணையாகிய கடலில் ஆனந்தத்தோடு மூழ்கிக் கிடப்பேன். காட்சி-பார்வை. உள்ளிருந்தும் ஒளித்தல்-நமக்குள் இருக்குங் கடவுளை நாம் அறியாமை. அறந்தானோர் வடிவாய் அமைந்தான்-அறமே உருவமாகப் பெற்றவர். சமைதல்-நிகழ்தல், அமைதல்.

7. எதிர்-ஒப்பு. பண்ணை-வயல். பொருள்-அர்த்தம்.

8. புனம்-கொல்லை. பள்ளிவாசல்-கோயில்; அரசர் பெரியோர், பிரபுக்கள் வசிக்கும் இடங்கள். ஒருங்கு-ஒன்றாக. கா-முதலை. இறா-ஒருவகை மீன். இறால் என்பது தேனடை.

9. அபிநயப் பாட்டு. (Action Song).

12. இப்பாடத்தில் பால், இடம், வேற்றுமை, எண்ணுப்பெயர் ஆகிய இவைகட்கு உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய உதாரணங்களில் இலக்கணப் பெயரைக் காட்டாமலே பயிற்சி செய்விக்க.

13-14. செல்வப்பிள்ளை-அன்புக்குரிய பிராணி (pet animal) உருத்திராக்ஷப்பூனை, 16-ஆம் பாடம் பார்க்க. கோமேதகம் நவரத்தினங்களில் ஒன்று. பாடம் முடிவில் நாய்க்கும் பூனைக்கும் உள்ள தன்மை குணவேறுபாடுகளைப் பிள்ளைகள் தாங்களே கூறும்படி செய்க.

17. சிலை-கல். அண்ணுவியார்-பெரியவர். தல்லி-தாய். பிட்டா-குழந்தை. நோரு-வாய். பழமொழிகளைக் கதைகளுடன் மாணவர்கட்கு விளங்கவைத்தல் வேண்டும்.

19. ஆரியன்-குரு. இதுவே-இதுவோ.

20. திங்கள்-மாதம். பரிந்து-அன்போடு. அணி-ஆபரணம். குதலை—குழந்தைகளின் அரை குறையான பேச்சு. கட்டி—மார் போடணைத்துக் கைகளாற் கட்டிக்கொண்டு. அத்தகு-அப்படிப்பட்ட. அடிமலர்-பாததாமரைகள்.

21. குண்டலம்-காதணி. மகாகுண்டலம்-சுறுமீன் வடிவமாகச் செய்த காதணி. பரதவர்-கடற்கரை வாசிகள். கோடு—கொம்பு. கயல்-ஒருவகை மீன், கெண்டை. பிறழ்ச்சி-புரளுதல். மீனாக்ஷி-கெண்டை மீன் போன்றகண்களை யுடையவள்.

23-24. அவியல்-வேகவைத்துச் செய்யும் பதார்த்தம். முக்கனி-மா, பலா, வாழை. சிமிழி-உருளை வடிவுடைய சிறுபெட்டி. நவரத்தினங்கள்-கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. பிரபுசிகாமணி-பிரபுக்களிற் சிறந்தவன்; சிகா-தலை; மணி-இரத்தினம். முடி-தலை. கதையைப் பிள்ளைகளைச் சொல்லும்படி செய்து உழவின் சிறப்பை விளக்குக.

25. அக்கம்-விலைசெய்யும் தானிய அளவு. பருவம்-ஒவ்வொரு தானியமும் விளையுங் காலம். பறித்து-அநியாயமாய்ப் பிடுங்கி. அக்கம்-தானியம். நீர்அகம்—நீர்நிலைகள். போனகம்-உணவு. உழந்து-வேலைசெய்து. மாரி அல்லது—மழை இல்லா

விட்டால், காரியம் இல்லை - எக்காரியமும் நடைபெறாது. மின்னுக்கெல்லாம் - மின்னுவதெல்லாம். மேழிச்செல்வம் - பயிர் செய்வதனால் உண்டாகும் செல்வம். கோழைபடாது - மானக்கேட்டை உண்டாக்காது. 4, 6 இப்பாட்டுக்களுக்கும் உழவுத்தொழிற்குமுள்ள தொடர்பை மாணவருக்குத் தெளிவிக்க.

26. பச்சைப்பசேல், வெள்ளைவெளேல், கன்னங்கறேல் செக்கச்செவேல் முதலியன நிறங்களின் மிகுதியைக் காட்டும் சொல்லடுக்குகள்.

27. இராஜப்பிரதிநிதி—இராஜாவுக்குப் பதிலாக வேலை பார்ப்பவர். கலெக்டர் - பணத்தை வசூல்செய்து சேர்க்கிறவர்.

28. இப்பாடத்தில் நமது இந்தியதேசம் ஒரு தெய்வப் பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. மலயமலை-பொதிய மலை; இதில் தமிழாசிரியராகிய அகத்தியர் வாசஞ் செய்வதாகச் சொல்லுவர்; இது கன்னியாகுமரிக் கருகில் உள்ளது. வேங்கடம்-தமிழ்நாட்டுக்கு வடவெல்லை. பொன்னி-காவேரி. கன்னி-தாம்பிரபரணி யாறு. காளிதாசன்-வடமொழிக் கவி.

29. உரம்-வலி. பாராட்டி—மெச்சி. கோழை-பயங்கொள்ளி. அச்சமுள்ளவன். மேதாவி-பேர் அறிஞன்.

30. மெய்வருத்தம் - உடல் உழைப்பு. உரிய - சொந்தமான. அதிதி பூசை - வீட்டுக்கு வரும் முகமறியாத விருந்தினர்கட்கு உணவு முதலியன கொடுத்து உபசரித்தல்.

31. அம்பறாத் தூணி - அம்பு நிறைந்த புட்டில். கைகவித்தல்-கை அமர்த்தல். செம்மல்-பெருமையிற் சிறந்தோன். அமிழ்து-அமிர்தம்; நரை திரை மூப்புச் சாக்காட்டை ஒழிக்கும் தெய்வ உணவு. வள்ளல்-அளவின்றிக் கொடுப்பவன்.

34. ஆதியில்...உலவிய-நெடுங்காலத்துக்குமுன், அதாவது அயல் நாட்டார் இந்தியாவில் நுழையத் தலைப்பட்டதற்குமுன்பு இவ்விந்தியதேசம் முழுமையும் தமிழே தனிமொழியாக விருந்தது. மாதொருபாகன்-பார்வதிதேவியை இடப்பாகத்தின்கண் வைத்தருளிய சிவபெருமான். இளமை—அழியாமையும் மாறாமையும். ஆயும் புலவர்-தமிழாராய்ந்த சங்கப்புலவர். தெலுங்கு, கன்னடம், மலையாளம்,-துளுவம் என்னும் மொழிகள் தமிழினின்

றும் தோன்றியவை. துளு-துளுவம். கோயில்...தமிழ்—கோயில்களில் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி ஆகிய இவைகள் ஓதப்படுகின்றன.

35. சாலவும் - மிகவும். வையம் - பூமி. வையம்...தொழு தலங்கள்தோறும் சென்று கடவுளைத்தொழு; எத்தெய்வத்தையும் இகழாதே. எண் - கணக்கு. ஔவியம். பொறாமை. ஆக்கம் - செல்வம். ஞயம் - நயம்; இனிமை. தாழ - பணிவுடன்- ஙகரம் எம்மொழியினும் வாராத எழுத்துக்களுடன் அரிச்சுவடி எட்டில் இருப்பதை எடுத்துக்கொண்டு காட்டி மாணாக்கருக்கு விளக்குக. வளை-பந்துக்களை வளைத்துக்கொள். கௌவை பழிச் சொல். திரை - அலை. பாடு - துன்பம். வளவன் - அரசச்செல்வமுடையவன். நேரா - நேர்மைப்படாத, மனவொற்றுமையுடன் செய்யாத. நைபவர் - மெலிந்தவர், ஏழைகள். நொய்ய— தாழ்வாக. பால் - சிறந்த உணவு. மொழிவது - பெரியோர் சொல்லும் அறிவுமொழி. உரவோர் - உடல் வன்மையும், மனவன்மையும் உடையவர்.

36. தேட்டை - செல்வம். ஏவா - ஏவு முன் காரியங்களைச் செய்யும். மூவா - கெடாத. மருந்து - தேவாமிர்தம். வெட்டென-கத்தி வெட்டைப்போல். கேட்டில் - தரித்திரகாலத்தில். உறுதி - மனவுறுதியுடன் தீச்செயல்களில் செல்லாமல் உண்மை நிலையில் நிற்றல். சேமம் - காவல். ஏழைமை - குறை. புலை - மாமிச பக்ஷணம். பைய - மெல்ல. முற்பகல்...... விளையும் - நல்வினை தீவினைகளின் பயன் உடனே உண்டாகும் என்பது. மோனம் - மௌனம். வரம்பு - எல்லை.

600 008

The Royal Printing Works, Mount Road, Madras, June 1929 B—X.

மணி. திருநாவுக்கரசு முதலியார்

இயற்றியவை.

	ரூ.	அ.	பை.
அறநெறி விளக்கம்-கதிர்-க ...	0	5	0
அறநெறி விளக்கம்-கதிர்-உ ...	0	6	0
அறநெறி விளக்கம்-கதிர்-ந ...	0	7	0
திருக்கண்ணப்பன் ...	0	5	0
குமணன்—கொடைவீரன் ...	0	3	0
பா மணிக் கோவை முதற்பாகம் ...	0	6	0
பா மணிக் கோவை இரண்டாம்பாகம் ...	0	8	0
பா மணிக் கோவை மூன்றும்பாகம் ...	0	10	0
உரை மணிக் கோவை முதற்பாகம் முதற்பகுதி.	0	6	0
உரை மணிக்கோவை முதற்பாகம் ...	0	8	0
உரை மணிக் கோவை இரண்டாம்பாகம் ...	0	10	0
புலவர் கதை முதற்பாகம் ...	0	12	0
புலவர் கதை இரண்டாம் பாகம் ...	0	12	0

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.